செய்தக்காதிறு மரக்காயர்

# திருமண வாழ்த்து

பதிப்பாளர்


S. முஹம்மது ஹுஸைன் நயினார்
பி. ஏ. (மதராஸ்), எம். ஏ., எல் எல். பி. (அலிகார்), பிஹெச். டி. (லண்டன்)
பேராசிரியர், அறபி, பார்ஸி, உறுது பகுதியின் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்



வெளியிட்டவர்

Mrs. சுல்தானு அப்துல்லாஹ், எம். ஏ., பி.டி.

95, சான்தோம் பெரியசாலை

மயிலாப்பூர், மதராஸ்–4


பதிப்புரிமை ] 1953 [illegible]

முதற் பதிப்பு 1953

நூறி பிரஸ்
54, மெயின் ரோடு
இராயபுரம், மதராஸ்

புத்தகம் கிடைக்கும் இடம்

எஸ். வாஸன் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்

# செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| நூலாராய்ச்சி | ... | i—xii |
| நூல் | ... | 1—31 |
| கடவுள் வாழ்த்து | ... | 1 |
| தசாங்கம் | ... | 2 |
| பாட்டுடைத்தலைவன் வரலாறு | ... | 3—6 |
| நிசசிதார்த்தம் | ... | 7—8 |
| பந்தற்கால் முகூர்த்தமும் மணவறை அலங்காரமும் | ... | 9—11 |
| மணமகன் அலங்காரம் | ... | 12—13 |
| பவனி வருதல், மகளிர் கூற்று | ... | 13—21 |
| மணமகன் மணவறை சேர்தல் | ... | 22—23 |
| மணமகள் அலங்காரமும் மணவறை சேர்த்தலும் | ... | 23—24 |
| மணமக்களை வியந்து உரைத்தல் | ... | 25—26 |
| மைத்துனர் நகையாடல் | ... | 26—27 |
| வரிசை வழங்கல் | .. | 28—30 |
| வாழ்த்துரை | ... | 31 |
| குறிப்புரை | ... | 33—34 |
| அரும்பதவுரை | ... | 35—36 |

# திருமண வாழ்த்து

## நூலாராய்ச்சி

இந நூல் சீதககாதி வளளலாரின் திருமண வரலாறறை நயமுற எடுததுக கூறுகின்றது. இதனுல், அவர் குடும பத்தின பெருமையும, செலவமும் நனகு தெரிவதுடன், அக்காலத்திலுள்ள தமிழர்நாகரிக்மும், பழகக வழககங்களும ஒருவாறு புலனுகின்றன.

கி. பி. பனனிரண்டாம நூற்ருண்டில் கம்பர் இராமாயணத்தைக் காப்பியமாகப பாடினர் எனபர். அவர் காலத்திற்குப பின் பெருங் காபபியங்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லை. சிறுகாப்பியங்களே மிகுதியாக இயறறப பட்டு வந்தன பதினைந்தாம நூற்ருண்டிற்குப் பின் அமமானை எனறு சொல்லப்படும் சொற்சீரடிகளில் அமைந்த பாவினங்கள் தோன்ற ஆரமபித்தன. அவை இரண்டு அடிக் கணணிகளால் ஆக்கப்பட்டவை., ஒவவோர் அடியும் நானகு சீராய வருவன. அதே காலத்தில் தான் பளளு, சிந்து ஆகிய நூல் வகைகளும தோன்றின.

மேலே சொனன பாவினங்கள் வழக்கில் வரு முன்னர், செய்யுள இயற்றுபவர், தமிழர்நாகரிகத்துக்குப் புறம்பான கருத்துக்களையும, சொற்களையும, தம செய்யுளில் கையாள மாட்டார். அவ்விதம சேர்த்துப் பாடபபட்ட நூலை ஏனைய புலவர்கள குறறமற்ற தெனறு ஏறறுக்கொளளார். அக் காரணததாலே தமிழக் காவியங்களுள வந்துளள கருத்துக் களும், சொற்றொடர்களும, ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணபபடுகினறன. ஆனுல், காலப்போககில் தமிழப புலவர்கள தம செந்தமிழ நடையைக் கலபபற்றதாக வைத்துக் காபபாற்ற இயலவில்லை,

கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டிற்கு மேல் இந்தியாவில் முஸ்லிம்களின் நாகரிகமும், பழக்கவழக்கங்களும் எங்கும் பரவி வந்தன. அவற்றை விளக்கக்கூடிய பல புதிய சொற்களும், கருத்துக்களும் தமிழில் வழங்க ஆரம்பித்தன. அவற்றையும் சேர்த்துப் புலவர்கள் நூல்கள் இயற்றினர். அவ் வகையில் அம்மானை, பள்ளு, சிந்து, நாட்டியக்கலை முதலியன வெளி வந்தன. அவற்றில் வடசொற்கள் விரவியும், உலக வழக்குச் சொற்களும், திசைச் சொற்களும் ஆங்கங்கே அமைந்தும், பழமொழிகள் இடையிடையே சேர்ந்தும் எளிதிற் பொருள் புலப்படும் இனிய நடை அமைந்தும் விளங்கிய காரணத்தால் பொது மக்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்தும் மனப்பாடம் செய்து உவப்புடன் பாடியும் வந்தனர்.

சீதக்காதி பேரில் திருமண வாழ்த்து என்ற நூல் மேலே குறிக்கப்பட்ட அம்மானை வகையில் பாடப்பட்டிருக்கிறது. அதன் ஆசிரியர் உமறு கத்தாப் புலவர் என்று ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உமறு கத்தாப் என்ற புலவர் இருந்ததாகத் தெரியவில்லை. உமறு என்று ஒரு புலவர் இருந்தார். அவர் சீருப்புராணம் பாடியிருக்கிருர். அவர்க்குக் கத்தாப் என்ற விசேடப் பெயர் இல்லை. கத்தாப் என்பது உமறு இப்னு அல்-கத்தாப் (கத்தாபின் மகன் உமறு) என்ற பெயரின் ஒரு பகுதி. உமறு-இப்னு அல்-கத்தாப் என்பது முகம்மதுநபி அவர்களுக்குப் பின் இரண்டாம் கலீபாவாக வந்தவருடைய பெயர்.

கத்தாப் என்ற அறபிப்பதம் பேச்சு வன்மை என்ற பொருளைக் குறிக்கும். உமறுவின் தந்தையாகிய கத்தாப் வன்மையாகவும், சொல்லழுத்தமாகவும் பேசுபவராகையால் அப் பெயரை அவருக்கு அறபியர் சூட்டியிருக்கலாம்.

தமிழ் நாட்டில் இஸ்லாம் பரவிய பின், உமறு இப்னு அல் கத்தாப் கலீபாவின் பெருமையைப் பாராட்டிய தமிழ் முஸ்லிம் கள் அவரை 'உமறுகத்தாப்' என்று வழக்கத்தில் பேசி வந்திருக்கிருர்கள். அதனுல், 'கத்தாப்' என்பது கலீபா உமறுக்குச் சிறப்புப் பெயராக எண்ணும்படி இருக்கிறது.

அறியாதவர் அதைச் சிறப்புப் பெயரென்றே கருதியுமிருக்கலாம். உண்மையில், கலீபா உமறுவின் சிறப்புப் பெயர் அல்பாரூக் (பகுத்துப்பார்ப்பவர்) என்பது.

தமிழ் நாட்டில் உமறுப்புலவர் சீறுப்புராணம் என்ற அழகிய காப்பியத்தைப் பாடியிருப்பதனால், சிலர் புலவரின் வாக்கு வன்மையை மெச்சி அவரை உமறுகத்தாப் என்று அழைத்து வந்திருக்கலாம். அக்காரணத்தால் அப் பெயர் உமறுப் புலவரைக் குறிக்கும்; அவரே இந்த நூலைப் பாடியிருக்கலாம் என்று சிலர் கருதலாம். ஆனால், கல்யாண வாழ்த்தின் நடையை உற்று நோக்குபவர், தமிழ்க் காவியங்களில் நன்கு பயிற்சி பெற்ற உமறுப்புலவர் வாக்கு என்று திட்டமாகச் சொல்லத் தயங்குவர்; ஆனால், பல இடங்களில் உயர்ந்த நடையாக இருக்கிற தென்பதையும் மறுக்கமாட்டார்.

திருமண வாழ்த்தின் ஏட்டுப்பிரதி நமக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரையில் கிடைத்தது. அதில் சில இதழ்கள் காணப்படவில்லை. எஞ்சியிருக்கிற ஏடுகளிலும் சில வரிகளைச் செல்லரித்துவிட்டன. இந்த வாழ்த்து நெடுங்காலமாக மக்களிடையே வாய்மொழியாக வழங்கியும் இருக்கலாம். பிற்காலத்தில் குறைந்த கல்வியறிவுடையவர் ஒருவர் எழுதியிருக்க வேண்டும்; அதனால் எழுத்துப் பிழைகள் அதிகம் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. மற்றொரு ஏடு கிடைக்கும்வரை இந்த நூலை உமறுப்புலவர்தாம் பாடினார் என்று திட்டமாகச் சொல்ல இடமில்லை.

வேறொரு வகையில் ஆராயும்போது உமறுப் புலவர் திருமண வாழ்த்தைப் பாடியிருக்க மாட்டாரென்று புலனாகின்றது. புலவருக்கும் வள்ளலாருக்கும் எங்ஙனம் நட்பு ஏற்பட்டதென்ற விவரத்தைக் கூறுங் கர்ண பரம்பரையான கதையைக் கவனிக்கும்போது வள்ளலாரின் கல்யாண காலத்தில் அவரைப் புலவர் அறிந்திருப்பரோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. எட்டையா புரத்தில் இளம் பிராயத்தினராயிருந்த உமறுப்புலவர் அப்போது வள்ளலாரைத் தெரிந்திருக்க மாட்டார் என்றே சொல்லலாம். வள்ளலாருக்கும்

புலவருக்கும் அதிக வயது வித்தியாச மிருந்ததென்று பல வகைக் காரணங்களால் அறிகிறோம். முக்கியமானதோர் காரணம் வருமாறு. புலவர் சீறாப் புராணத்தை இயற்றுவதற்கு வள்ளலார் காரணமாயிருந்தாலும் புராணம் பாடப்பட்டபோது வள்ளல் புகழுடம்பு அடைந்திருப்பார் என்று நன்கு தெரிகிறது. ஏனெனில், சீறாப்புராணத்தில் வள்ளலார் பெயர் எங்கும் காணப்படவில்லை. நூலை ஆதரித்த வள்ளல் அபுல்காஸிம் மரக்காயர் பெயர்தான் கூறப்படுகிறது. ஆனால், வள்ளலாரின் காலத்துக்கு முன் வபாத்தான சதக்கத்துல்லா வலி அவர்களைக் குருவென்று சீறாப் புராணத்தின் கடவுள் வாழ்த்தில் புலவர் பாடுகிறார். வலி அவர்கள் அக்காலத்தில் முஸ்லிம்களுக்கிடையே சிறந்த ஞானியாகவும், இஸ்லாம் மார்க்கத்தில் மக்கள் பயிலுவதற்கு அரும்பாடு பட்டுப் புத்துணர்ச்சியை ஊட்டிவந்த பெரியாராகவும் இருந்த காரணத்தாலும், நபி அவர்களின் சரிதையில் சில பாகத்தை வலி அவர்களின் மூலம் கற்றறிந்த காரணத்தாலும் குரு வென்று வணக்கம் செலுத்தியிருப்பார் என்று கொள்ளவேண்டும். வள்ளலார் கலியாண காலத்திற்குப் பின்னர் வாணிகத்தில் பெரும் பொருள் சேகரித்திருப்பார். அக்காலத்தில் அவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்திருப்பாராகையால் நொண்டி நாடகத்தில் கூறியபடி புலவர் கூட்டத்தார் எல்லாம் கல்யாணகாலத்துக்குப் பிறகுதான் வள்ளலாரைத் தெரிந்திருப்பர். அக்குழுவில் உமறுப்புலவர் தலை சிறந்து விளங்கியிருப்பார் எனலாம்.

சீதக்காதியின் குடும்பம் நெடுங்காலமாகக் கீழக்கரையில் வாழ்ந்து வந்ததனால் அக் குடும்பத்தாருடன் அடுத்துப் பழகி நட்புக்கொண்டிருந்தவரும், அக்குடும்பத்தின் பழங்காலச் சிறப்பையும், பெருமையையும் நன்கு தெரிந்தவருமான புலவர் ஒருவர்தாம் திருமண வாழ்த்தைப் பாடியிருக்கவேண்டும். அவர் பெயர் இன்ன தென்று தெரியவில்லை.

மனித வாழ்க்கையில் கல்யாணம் எப்பொழுதும் மிகவும் முக்கியமான அம்சமாய் இருக்கின்றது. தமிழர்நாகரிகத்தில் மணம்புரிதல் மிக்க சிறப்பாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.

மணமக்களைக குறித்து வாழத்துப பாடுவது தமிழர் மரபு. இவ வாழததுது நூலில் கீழககணட முறைமை அறியப் படுகிறது.

வாழத்தின் ஆரமபத்தில் தெயவ வணக்கம் செலுததிய பின தசாங்கம கூறி மணமகனுடைய குடுமபத்தின் சிறப்பையும பெருமையையும் எடுத்துச்சொல்லி, நிச்சிதாாதத விவரமும மணமகனின குணம, ஒழுக்கம, பெருமை இவையும, மணமகன் அலங்காரமும் ஊர்வலச சிறபபும, பவனி வருமபோது எழு வகைப பருவ மாதரின எழுசசியும பேசசும, கலயாணப பந்தல், மணவறை ஆகியவறறின அலங்காரமும, மணமகளுககு ஆடை ஆபரணங்களால் அலங்கரிககிற விவரமும, தாலி கட்டுதலும, மைததுனா போராட்டமும, வரிசை அளித்தலும ஆகியவற்றைச் சிறபபுறக் கூறி மணமககள இருவருககும வாழத்துச் சொல்வதோடு முடிவுறுகினறது.

## தசாங்கம்

பாட்டுடைத தலைவனுககு உரிய தசாஙகம கூறும கண்ணிகளுள நானகு கணணிகள எழுதிய ஏடு இலலை. மலை, நதி, யானை, கொடி, முரசு எனபனவற்றைப பாராடடுகிறார். நதியைப பாராட்டுகையில முத்தும நிதியும நிறைந்ததெனறு புகழ்கின்றார். முரசைச் சொல்லும பகுதியில சேர, சோழ, பாண்டியர்களை வெல்லக்கூடிய சேனையை உடையவரெனறு வாழததுகின்றார்.

## குலப் பெருமை

பாட்டுடைத் தலைவனாகிய சீதக்காதியைப் பாராடடுகையில் அவர் குலத்தில் தோனறிய பல பெரியார் செய்த அருமைச் செயல்கள் அவா செய்தனவாக ஏறறிச் சொல்லபபடுகினறன. அங்ஙனம அரசர்களையும பிரபுககளையும புகழுமிடதது அவ ரவர் முனனோர்களுடைய செயலகளை அவர்கள மேல ஏறறிப புகழதல் புலவர்கள மரபு. அவ் வகையில் மதுரைப பாண்டியன்

வள்ளலாருக்கு ஒரு விருந்தளித்து சாணததால் எச்சில் தெளித்ததனுல், பாண்டியனுக்கு வளளலாரும் ஒரு விருந் தளித்து அதற்குப பின விருந்துண்ட கூடத்தை எரித்த விவரத்தை,

"ஏதென்றீர் சாணுக மிட்டாற்போ மெங்களெச்சில்
கூதொன்று முங்களெச்சில் சுட்டாறபோ மெனறதுஙகன்"

எனறவாறு புலபபடுததியது, பாண்டியன் மகளைக் கல்யாணம் செய்துகொண்டது, மழவனைக்காத்தது, நானூறு குதிரைக்கு மார்பேற்ற செட்டிகளைச் சிறை மீட்டது, கோமுட்டிகளைச் சிறை மீட்டது, ஆரியரை அரியாசனத்தில் வைத்தது, கமமியரைத் தம மகவாயக் காததது, வீரை நகா மாவலியைக் காத்தது, சாணாரதமைக் காததது முதலியவற்றைச் சீதக் காதி செயல்களாக அவர்மேல் ஏற்றிக கூறுதல் காண்க. அச் செய்திகளின விவரம விளங்காமையால் குறிப்புரை எழுதக்கூடவில்லை. நூல் வெளி வந்த பினனர் விவரம தெரிந்த பெரியார் அச் செயதிகளை விளகக முன் வருவார்களெனறு எதிர் பார்க்கிரும.

சீதக்காதி குடும்பததார் பல நாடுகளுடன வாணிகம செய்து வந்த பல தேசங்களின பெயர்கள கூறபபடுகினறன. அந்நாடுகளில் கிடைககக்கூடிய பொருள வகைகளுள் அமபர், குங்குமபபூ, பனனீர், நாணயங்கள முதலியன சொல்லபபட் டிருக்கினறன.

## மணமகன் ஒழுக்கம்

சீதக்காதி இஸ்லாமியக் கொளகையினபடி வாழ்க்கை நடத்துதல், வேதியா, கறரோ, பகீர் ஆகியவர்களை ஆத ரித்தல், வீரம, கருணை, வாய்மை, அழகு, அறிவு, பொறை, நிறை முதலிய குணஙகள உடையராயிருத்தல் காரணமாக, தபோதனன, கலிக்கஙகுலுக்கோர் சூரியன, வெமபுலி, ரண கேசரி, கண்ணன், அரிச்சநதிரன, மனமதன, அகத்தியன, தருமன், சுபசோபனன என்று பாராட்டுகினறுர் புலவர்.

மேலே சொன்னவிதமாக மணமகனுகிய சீதக்காதியின் சிறப்பை எடுததோதி நிச்சிதார்த்தம செய்து, முகூர்த்தக் கால் நாட்டின விவரம சொலலபபடுகிறது.

## பந்தற் சிறப்பு

பற்பலவிதமாகச் சிஙகாரிககப்பட்ட கல்யாணப பந்தலின் அலஙகாரம மிக்க அழகாகச சொல்லபபடுகிறது. செம பொன, வெளளி, வசசிரம, மரகதம், தஙகத் தகடு, மாணிககம, புருடராகம ஆகியவற்றின சரங்களை பததிபத்தியாய்த் தூக்கி முன முகபபில வேய்ந்து, மல்லிகை, முல்லை, சணபகம, பிசசி, வெண்டாமரை, செந்தாமரை, இருளவாசி, செவ்வந்தி, கொனறை, செவ்வாம்பல், மாதுளமபூ, நீலோற்பலம ஆகிய மலர்களால் கட்டபபட்ட சரஙகளைத் தொடுத்துப் பந்தரிடமெல் லாம விதானித்து, தென்னம் பாளை, கதலித்தாறு, இளநீர்ப் பைங்குலை, எலுமிசசம பழம, கொழிஞசிப பழம, வாழைப் பழம், தமரத்தம பழம, பலாவின் கனி முதலியவற்றைத் தூககி, கருமபு, கதலி, கமுகு ஆகியவற்றைத் தூண்களதோறும் சேர்த்தி, மேகவனனபபட்டு, வீரவாளிச் சேலை, ருத்ரவன்னி, சந்திர வன்னி, சூர்யபடம், பொற்சரிகைக் கமபிக்கரைச் சேலை ஆகிய இவற்றை வனனவனனமாகக் கொயது அலங்கரித்து, மணவறையில் சிங்காசனம் அமைத்தனர்.

நவரத்ன விளக்கும, தூண்டாமணி விளக்கும், தூக்கு விளக்கும், குத்துவிளக்கும, சித்திர விளக்கும ஏற்றி, மணவறை முன பொன்னிறை குடத்தில் பூமபாளை சாய்த்து வைத்தனர்.

மேலே சொன்னவிதமாக அலங்கரிக்கப்பட்ட கல்யாணப் பந்தலை ஊர்மக்கள் வந்து பார்க்கும இயல்பை மிகவும் அழகாக எடுத்துரைக்கும் பகுதிகள் இருககினறன.

"மாகத் தளாவு மணிக்கா வணமபார்த்துப்
போகக்கா லேருத பொனனனையா ரோர்கோடி"
"வஞசியிடை தளளாட வந்துபசுங் கிளளையொடுங்
கொஞசிவிளை யாடிநிற்குங கோமபனையா ரோர்கோடி"

முதலிய கணணிகளில கூறியிருத்தல் காண்க.

## மணமகன் அலங்காரம்

மணமகன நீராடி ஆடை அணிகளை அணிவதாகக் கூறும் கண்ணிகளில, அவருககுரிய அலங்காரப்பொருளகள் பல சொல்லபபடுகினறன.

அவை—பசுமபொன்னுடை, வன்னச்சுளிகை நிசார், பொனனரைஞாண, வசராஙகிச சோடு, பச்சை மணி உதர பந்தனம, வச்சிர வாகுவலயம, வாகு பந்தனம, வயிரத் துரு, ரத்ன கஙகணம், ரத்ன கரபந்தம, தண்டரள மாலிகை, தஙகச் சரபபளி, கண்டசரம, பொன பதககம, மாணிகக மாலை, சருவந்து, முடிமீது வயிரத்துரு, பூசசெண்டு என்பன.

வாசனைத் திரவியங்கள்: பொன்னம்பர், கஸதூரி, பூம் பன்னீா, சந்தனம, தென்னம புழுகு, சவவாது முதலியன.

## பவனிச் சிறப்பு

மணமகன் பவனி வருமபோது அவருடன் அரசர்மக்கள், விலபிடித்த தொட்டியர், வடிவாள் எடுத்த குதிரை ராவுததர், கட்டியககாரா, வித்துவாஙகிசர், பாவாணர், நல்லிசையாளர், சாமரை வீசுவோர், வாத்தியக்காரர், நட்டுவனமார், பரத நர்ட்டியம புரியும மாதா, ஆலத்தி யெடுக்கும மாதர் என்பவர் கள சென்றதாகச் சொல்லியிருக்கிறா.

அப் பகுதியில் திமிலி, தடாரி, தபபு, வீருணம, பேரிகை, பம்பை, பெரு முரசு, மல்லாரி, பூரிகை, நாதசுரம், ஆனைமேல் பேரி, ஒட்டகைமேல டமமானம, குதிரையினமேல் டம்மானம், நவுரி, கொமபு, வெண்சங்கு, மத்தளம, வீணை, தண்டை வாத் தியம, கயிலாச வீணை, காமாட்சி வீணை, ருத்ர வீணை, உடுக்கை எனனும வாத்திய வகைகளும், கல்யாணி, காமபோதி, கொண்டல்சொரிமேகக் குறிஞ்சி, சஙகராபரணம, தோடி, வராளி, தனனியாசி, கௌரி முதலிய ராக வகைகளும, வயிரப பொற் குடை, பவளச்செழுங குடை, செமபொற்குடை, வெளளி வெண் குடை முதலிய குடை வகைகளும சொல்லப் படுகின்றன.

தங்கத் தீவட்டி, வெள்ளித் தீவட்டி, ஆறுகால் பந்தம், ஏணிவிளக்கு, இரத விளக்கு, பாணி விளக்கு, சூல விளக்கு, ஐந்துகால் விளக்கு முதலிய விளக்குவகைகளும் இப்பகுதியில் சொல்லப்படுகின்றன.

மணமகன் ஊர்வலம் வருமுன வீதிகளிலெல்லாம தோரணங்கள் நாட்டி, தூபதீபங்கள எடுத்துப் பூரண கும்பம் வைத்துப் பன்னீர் தெளித்து வைக்கப்பட்ட விவரம பவனிச் சிறப்பை அழகுறச் செய்கின்றது.

எழுவகைப பருவ மாதரும மணமகனாகிய செய்தக்காதி மகராசன் பவனி வருவதைக் கண்டு எதிர்போய்நின்று வியந்து உரைக்கும் பகுதி மிக்க நயமுடையதாக அமைந்துளது. மண மகனைப் பார்த்து

பெருமானை காத்தினிய பொன்மானை ஒடியெய்யது
திருமானை வைத்தபுயன் சீமான்

என்றும்,

இவர்க்காக்ான்......இந்திரன் க்காண்
தவறாத வாய்மை யரிச்சந்திரன காண்

என்றும் பலவாறு பாராட்டுகின்றனர்.

பீரங்கி, சத்த வெடி, கும்ப வெடி, கலச வெடி, அம்பு வெடி, இரட்டை வெடி, பூச்சக்ரவாணம, மாச்சக்ர வாணம, ஆகாச வாணம், படை வாணம், குமார வாணம், எலி வாணம, பாம்பு வாணம, பூத வாணம, பரிசை வாணம, வெண்சாமரை வாணம, கப்பல் வாணம், குதிரை வாணம, கூடைப் பெரு வாணம், மயில் வாணம, கும்ப வாணம், சிரட்டை வாணம், குண்டணி வாணம முதலிய வாணங்களின் வகைகளும் சொல்லப்படுகின்றன.

மணமகனுக்கு ஆடை அணிகளைக் கூறும் பகுதியில் அவருக்குரிய அலங்காரப்பொருள்கள் பல சொல்லப்படுகின்றன. அவை: சரிகைப்பூம்பட்டு, மாணிக்கப் பொற்கட்டோடு அமைந்த வச்ர மணிச்சட்டை, திருச்சூளி, பிறை, திரு, பச்சை வச்சிர

நீலக்கல் பதித்த சுட்டிவட்டம, அலுக்கத்து, மரகதப்பூக் கொபபுமணி, அரசிலைப பூத்தொங்கல், ஒன்னப்பூ, ஈத்தஙகாய்ச் செம்பவளப பொனசரவி, சரபபளி, தும்பிப்பதக்கம், கிளிப் பதக்கம், ஆளிமுகததாளிவில்லை, கொத்துவடம, தோள்முடி, புஜபந்தனம், வளைமணி அட்டியல், முன்கைவளை, ரத்னசரி முந்து, சந்துக்காறை, பொறகடையம, கறகட்டு வசசிரம, தண்டை, சிலமபு, சதங்கை, தங்கப்பாடகம், மேல்முடிச்சுச் சங்கிலி, கட்டு சரம், பொற்பீலி, காலாழி, மெட்டு, குபபாயம் ஆகியவையாம.

மணமகளின் அலங்காரம சொல்லபபடுகிற பகுதியைச் சேர்ந்த சில ஏடுகள் இலலை. அதனல் ஆபரண விவரம விரிவாக் எழுத முடியவில்லை.

சீதககாதி திருமண வாழததில் உளள விவரங்கள எல்லாம் அக் காலத்திலுளள தமிழ மக்களின் நாகரிகத்தைத் தெரிவிப் பதனேடு முஸலிமகளுககும இநதுக்களுக்கும் இடையேயுள்ள பழக்க வழககஙகளையும் நனகு எடுத்துக காட்டுகின்றன. இவ் விருகூட்டத்தாரும் இந்தியாவில் பல நூற்ருண்டு களாக வாழ்ந்து வருவதனல், நாள செல்லச் செல்ல அவர்களின பழக்க வழக்கங்களுள் பல மாறுதல்கள ஏற் பட்டன. இந்துக்கள் முஸ்லிமகளின் பழக்கங்களையும், முஸ்லிம் கள இந்துக்களின பழககங்களையும கைக கொண்டனர். அத ஞல், இந்திய நாகரிகம (Indian culture) தோனற ஆரமபித்தது. அவ்வித நாகரிகம வட இந்தியாவில் கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டிலிருநது வெளியாகிறது. ஆனல், தென்னிந்தி யாவில் முககியமாகத தமிழ நாட்டில் அவவிதக் கலப்பு நாகரிகம், கி. பி. ஏழாம் நூறருண்டிலிருந்தே வழக்கில் வந்திருக்கிறது. தென இந்தியாவில் மேற்குக் கரையிலும், கிழக்குக் கரையிலும உள்ள துறைமுகப பட்டினங்களுக்கு வாணிகம செயயத தொனறுதொட்டு வந்துகொண்டிருந்த அறபியர் கி. பி. ஏழாம நூற்ருண்டில் இஸலாம் தோன்றிய காலத்திலிருந்து இந் நாட்டில குடியேறி, சாத்விக முறையில் முகமமது நபி அவர்களின் பொன்மொழிகளை மக்களுக்குப் போதிக்கலாயினர். முதலில் அவர்கள எண்ணிக்கை மிகக்

குறைந்திருந்தது. நாளடைவில் இந் நாட்டுப பெண்களை மணந்து இல்லறம் நடத்தியதனல் முஸலிமகளின தொகை பெருகியது. இங்குத் தஙகிய முஸலிமகள கல்யாணத்தின் போது இந்துக்களின் பழகக வழக்கஙகளைப பினபற்றினர். அவற்றுள சில வறறை ஈணடுக் குறிககினறோம.

நிச்சிதார்த்தம் செய்தல், கல்யாணபபநதல், மணவறை அலங்கரித்தல், மாபபிளளையின் அலங்காரம், பவனி வருதல், மேள வாததியம, வாண வேடிக்கை, வெற்றிலை பாககு பழம முதலியன வழஙகுதல், நாட்டியக் கச்சேரி, குரவையிடுதல், தாலி கட்டுதல் முதலிய இந் நாட்டுப பழக்கங்களை முஸலிமகள கைக் கொணடனர். மணமகளுககுக் காதிலும, மூக்கிலும் ஆபரணம இடுவதும, பெண்ணுக்குச் சீர் கொடுபபதும இந்துக் களின வழக்கம். மாப்பிள்ளையின் கையாலே பெணணுக்குத் தாலி கட்ட வேண்டுமென்ற வழக்கமும் இந்துக்களிடையே உள்ளது. சீதக்காதி தமமுடைய கையாலே மணமகளுக்குத் தாலி கட்டினுரென்று திருமண வாழ்த்தில் கூறப்படுகிறது. இதனல், தமிழ நாட்டில் சில பகுதிகளில் வசித்து வந்த முஸ்லிம்கள் அப்பழக்கத்தைப் பின்பற்றி வந்தார்களென்று தெரிகிறது. ஆனல், இருபதாம் நூற்ருண்டின ஆரம்பத் திலிருந்து முஸ்லிம்கள மேலே சொன்ன பழக்க வழக்கங்களுள நாட்டியக்கச்சேரி, மேளவாத்தியம, மாப்பிள்ளை கையாலே பெண்ணுக்குத் தாலி கட்டுவது முதலிய பழக்கங்களை அறவே கை விட்டுள்ளனர்.

இந்த நூலை இயற்றிய ஆசிரியர் வர்ணனை செய்வதில் திறமையுடையவ ரென்பதும், ஆண், பெண் இருதிறத் தாருடைய ஆடை, அணி வகைகளை மிக அறிந்தவரென்பதும், தமிழர் நாகரிகத்தில் நல்ல பயிற்சியுடையவ ரென்பதும், கருத்துக்களை இடமறிந்து வெளியிடுபவ ரென்பதும நன்கு விளங்குகினறன.

திருமணவாழ்த்துள் சொல்லப்பட்ட ஆடை, அணி, வாத்தியம், தீவட்டி, விளக்கு, இவடி, வாணம் முதலிய வகைகளை யெல்லாம இக் காலத்திலுள்ள தமிழ் மக்கள் அனை

வரும் அறிந்திருக்க முடியாது. அவற்றை ஆராய்ந்து, விவரமான குறிப்பு எழுதியும், படம் வரைந்தும் ஒரு நூல் வெளியிட்டால் தமிழர்நாகரிகம், பழக்கம், செல்வம் முதலியவற்றை அறிந்து கொள்ள உதவியா யிருக்கு மென்று எண்ணுகிறோம்.

சென்னை
15-4-53

**S. முஹம்மது ஹுஸைன் நயினர்**

# செய்தக்காதிறு மரக்காயர்

## திருமண வாழ்த்து

எட்டையபுரம் உமறுகத்தாப புலவர் பாடியது

1 கார்கொண்ட ஞாலம கக்ஞதி யுமபலவும
ஏர்கொண் டமைத்த இறையொருவ னைபபணிவாம்

2 சீர்மேவு செல்வச் சிறபபாகி எப்பொருட்கும
போமேவி நினற பெரியோனைப் போறறிசெய்வாம

3 முதலொளியில் வந்த முகமமது றசூல்நபி°யை
நித்தலுமே நெஞசில் நினைநது துதிப்பாமே

4 தாயிற் கருணைவைத்த தறபரனைப போற்றிசெய்வான்
வாயிறகல வைத்தஅபூ வக்கர்° பதமபணிவாம

5 விணபார்த்த வெங்கதிரோன் மெய்கறுப்பச் செங்கமலக்
கணபார்த் தருளஉமறு கத்தாப° சரண்நினைவாம்

6 வேதப் பொருள்தெரிந்து மிக்கபுவி யிற்சிறக்க
ஓதுமஉது மானை°எம துளளந் தனிலநினைவாம்

7 வாட்டிறத்தால் நேர்ந்த மருவார குறுமபடக்கும்
ஆட்டிறத்தால் மிக்க அலியார்° பதமபணிவாம

8 ஆதி நபிமகளார்க கன்பா மகவான
நீதி அசனஉசைனை° நித்தலுமே போற்றிசெய்வாம

9 தகையதீன எல்லாம தழைக்கப புவியில்வநத
முகையதீன° செய்ய முளரிப பதம்பணிவாம

10 கருஙகொணட லார்சர்க் கரைமழை பெய்யவந்த
பெருஙகொண்டல் வாவா° பிரசமலர்த் தாளபணிவாம்

11 நிதக்கத்துள ளாகுபிறர்* நெஞசம பிளக்கவரும
சதகத்துல் லா○உபய தாமரைததாள போறறிசெயவாம

12 ஒருவ னருளபெற் றுலகில்ஒலி* யாகவந்த [வாம
தருமுதலி யார்லெவவை○ தாமரைத்தாள் போற்றிசெய

13 மாகாலம வநத மறைபபொருளை த தானவிளக்கும
சேகாலி லெவவை○ செழுஙகமலத் தாளபணிவாம

14 நலலோா பெரியோர்கள நாயனருள பெற்றிருநத
எல்லோா தமையுட இதயந தனில்நினைவாம

15 மானபரன செய்ய வகுதா பதிக்கிறைவன[1]
தான பரனபெரிய தமபி○ வரபாலன

16 நனமை விசயரகு நாதப பெரியதமபி○
தனமபரி பாலன தமிழகாய லாதிபதி

17 பூபன பெரியதமபி புததிரனசெய தககாதி
சோபன வாழததும சுகவாழததும வாழத்துகிறேன

18 செஙகமலை மார்பிற சிறந்தசெய தககாதி
மஙகள வாழததும மணவாழத்தும வாழத்துகிறேன்

## தசாங்கம் [2]

19 தேனைத் தகரத்திடையே திஙகட்கோட் டாலுழக்கி
வானைத தடவும மணிமரக தககிரியான

20 நிரைகொழிககும முததும நிதியும திரைககரத்தால்
கரைகொழிக்கும் செல்வக கறுபபாறு காவலவன[3]

21–24—ஆம கண்ணிகள எழுதிய ஏடு இல்லை

25 மெய்ப்பந் தயமுரைக்கும மேவார் சிரமபிடுங்கிக்
கைப்பந் தடிக்குங கரடவெளளை யானையினை

26 மீனைக கொடிபபுலியை விலலைவெனறு மேவலர்கள்
சேனைத் திரளமுறிக்குஞ சிஙகக் கொடிவேந்தன

27 தெமமுனைகல் யாணஞ சிறநதகொடை யெனறியமபும
மும்முரசு நினறு முழஙகுமணி வாயிலினை

28 மனந்தனிலுஞ சொல்லுகினற வாயமையிலும
[நித்ரைசெயும்
அனந்தரிலும அல்லாவி* ஞணைமற வாதபிரான்

29 முந்துதமிழக கீரததி முடிமேற றிரணடதெனச
சநத்ரகலை யொனறுஞ சறுவந்து* மாமுடியான

30 மெச்சுபுகழ மாறன விருந்தளித்துச சாணகத்தால
எச்சில்தெளித் தானென றிதயந தனில்நினைந்து

31 மீனவறகு நாமும விருநதளிக்க வேணுமெனறு
தானைமனன ரெல்லாந தலைவாசல் காததுநிறபப

32 பொனகூடந தனணிற் புருடரா கததளததில்
தெனகூட லாதிபனைச் சிஙகா சனததிலவைததுச்

33 செஙகனகப பளளயமுபொற சேனைககால் மீதில்வைத்துப
பஙகயககை பூசநறும பன்னீர மிகசசொரிந்து

34 கனனல்முத்தும வேயினமுததும கஞசமுததும
[பூகமுததுஞ
செந்நெல்முத்துந தந்திமுததுந தெஙகினமுத்தும
[சஙகின் முத்தும்

35 விலைமதியா நாகமுததும மீனினமுதது மானினமுததும
அலைகடலி லாணிமுத்தும அனனமா கச்சொரிநது

36 மாணிக்கம பசசை வயிரம வயிடூர்யங
காணிக்கை யான கறியாக வேபரபபி

37–40—ஆம கணணிகள எழுதிய ஏடு இலலை

41 நீயருந்தி மிச்சிலவைதத நித்திலத்தி னெசசிலுககு
நாய்பிணஙகு தெனறுபுகழ நாட்டுபிர தாபதுஙகன

42 கைதவனுங் கேட்டுக் களிகூர்ந்த தெனறதறபின
மைதவழுங் கூடமதை வனனிக் கமுதாக்க

43 ஏதென்றீர் சாணுக மிட்டாற்போ மெங்களெச்சில்
சூதொனறு முங்களெச்சில் சுட்டாறபோ மெனறதுஙகன்

44 நாணித் தலைகவிழ்ந்த நனமாறன பொனமார்பில்
மாணிக்கங் கொணடெறிந்த வச்ரா யுதபாணி

45 பாணடியனமுன வந்துநினறு பாவடிகை யாலழுத்தத்
தாணடுபரி மீதேறுஞ சங்க்ராம கெமபீரன்

46 பினனிற்கு மாரனெனும பேரரசு மாறனவன
முனனிற்கு மாரனென மூவுலகுங கீாததிபெறறேன

47 மைவருக்கஞ சூழசோலை மாமதுரைப பாணடியாகள்
ஐவருககு மாருக ஆருமபேர் கொணடபிரான்

48 நிலமகளுஞ சயமகளும நிறப வழுதிசெல்வக்
குலமகளைக் கைபபிடித்துக் கொணட மணவாளன்

49 வேனீட்டுஞ செஙகை விறல்வழுதி தன்கொலுவில்
காணீட்டும வாசல் கடந்தானை மீதுவந்தோன

50 மாறடங்கார் போறறும வழுதி மனையாட்டி
வீறடங்க வேலைககு வேலகொணட தாட்டீகன

51 விருபபினு லங்காதம மீனவனபெண வீடுமட்டுங்
கருபபினல் பநதலிடடுக் கல்யாணம செயதபிரான

52 தொழுவில்(?) மாறறலர்கள் சுறறப படைக்கலத்தால்
மழவன றனைக்காத்து மாநிலத்தில் வைத்தபிரான

53 மட்டில்லா நானூறு வாசிககு மார்பேறற
செட்டிகளை யனறு சிறைமீட்ட புண்ணியவான

54 செட்டி சிறைமீட்டுத தெனனிலங்கை தன்னிலுங்கோ
முட்டி சிறைமீட்டு மூவுலகும பேர்படைத்தோன

55 வாரிதனி லேறியநத வஙகமவிட்டி லஙகைபிடித்
தாரியனை மிககா யரியா சனததில்வைததோன

56 தந்நிகரி லைந்துவகைச் சாதியெனு மாந்தையில்வாழ்
கமமியரைத் தனமகவாயக காககு மபிமானி

57 பாணடிக் கரையளித்துப் பட்டினவ ரைபபுரந்து
நீணடக் கரையாரை நிர்த்தூளி யாகவென்றேன

58 சேரன குடையெடுபபத தெனனனகொடி யேந்திடவார்த்
தாரன துகிலெடுப்பச் சஙகப புகழெடுததோன

59 பாரைமுழு தாளும பரராசா கொணடாட
வீரைஙகா மாவலியைக காதத விறலவேந்தன

60 அமரரா ஞேர்க ளடஙகலுஙகொண டாடவென று
சமரகோ லாகலனெ த தறகாத்துத தாபஙித்தோன

61 வெல்வீரர் மேவலரை வீறடககி முககுவாககு
நல்வீர முமமூககும நாக்கும படைத்தபிரான

62 ஆஞ கரிகன 'அடைககலஙகாத் தோன'வலஙகைச்
சாஞர் தமைககாககுந தர்ம பரிபாலன

63 தெனமண் டலமுஞ செழித்தசெமபி நனஞடும்[4]
பொனமண டலமும புரககுந துரைபபெருமான

64 எணடிசையும போறறு மிரதக் கிணறுடனே
தணடரள வாரிச சலாபத துறையுமுளளோன

65 வந்தாடத் தோகை மயிலாடக் கொமபாடுஞ
சந்தாட விககிறைவன தாதாடும பூமபுயத்தான்

66 சொனஞடும பொனஞடுஞ் சோஞடும மேஞடும
எந்நாடுங் கொண்ட இறைவனவச்ர நனஞடன்[5]

67 பேருக வந்த பெரியதமபி தனபுகழை
மாருமலேவளாக்க வந்தசெயதக காதிமனனன

68 பிந்தாத செல்வப பெரியதம்பி கண்மணியாய
மந்தார தாருவென வநதசெய்தக் காதிமனனன்

69 தரணி புகழபெரிய தமபிவரத் தாலுதித்த
கருணைமுகி லானசெயதக காதி நரபாலன

70 வஙகளமகர் நாடம் மலையாள முச்சீனம
சிஙகளம மராடம தெலுங்கு குருநாடம

71 கலிஙகம குசலம கவுதமத்ரி கூடம
குலிங்கம் கடாரம குடகம துளுநாடம்

72 மாகரைநல் ஈழமசைை மஞசமபாரு சாலமடில்லி
ஆகரை கபாடம அயோத்தி கலியாணம்

73 பல்லவமகாம பீலிமக்கம பபபரவம குசசரியங்
கொல்லமாச சீனமகணடி கொஙகணம தாரிசபரு

74 கிட்டா மலாககாயிஸ கிரீஸ-ப பிராஞசுலாந்தா
அடடாள திககிலுமகிள ளாககைச் செலுததுபிரான்

75 சீனத் திருந்துவநத சிறுைப ரங்குவிக்க
மானத்து முததுமொலி வாரிமுத்த முந்தெறிபப

76 மரகதம வச்ரம வயிடூர்யம நீலம
அரவின மணிபுஷ்ப ராகஙகோ மேதகமும

77 பைகோவை யிறசெம பதுமரா கம்பவளம
கைகோவை யாகவிலே காட்டியொரு பாற்குவிக்க

78 ஈழத்திற் கிடடாலி லேறறிவந்த கபபலாககு
வேழத் திரளகளெல்லாம வீதிதொறுஞ சேர்ததுநிற்ப

79 அசசைனும ? மித் தேசத் தரசா வரவிடுத்த
பசசைப பரிகளைபபல் பநதிபநதி யாயநிரைபப

80 வஙகாள நாவி மலாக்காககஸ் தூரியமபர்*
கொஙகாருங் காசறையுங குங்குமபூப பனனீரும

81 சந்திரமும மோகரமுஞ* சமபூறும பல்லங்கியும
வநததங்கக் காசும மலிந்தகுதி ரைக்குளமபும

82 வெளளித்தகட் டவ்வாசு மிக்கரு பாயிறையால்
அள்ளிப் பலதிசையும அட்டகிரி போல்குவிககத்

83 தெண்டிரையிற பொன்னும்பல் தேசத்துப
[பொனனுமவரக்
கண்டுகளி கூருங் கருணை கடாட்சமுகில்

## நிச்சிதார்த்தம்

84 தேடும புகழக்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும
நாடும விசையரகு நாதப் பெரியதமபி

85 தேசம புகழசெயதக் காதியெனும பூபதிக்குக்
காசினியி லினபக கலியாண மெனறுசொல்லி

86 மணணரசர் போறறுகினற மனனியகெம பீரனுக்குப
பெணபேசிக கொணட பெருமை தனைபபுகல்வாம

87 பிரச மலர்மானைப பெறறோர் மனையகத்தில்
வரிசைக கிளையோரும மறறோருஞ சேர்நதிருந்து

88 வில்லமையும வாணுதலாா வேளெனுஞசெய் தக்காதி
வல்லமை பேசும வகையதனைக கேளுமினி

89 ஆதி யொருபொருளை அஞசுவக்தும* தபபாமல்
நீதி யுடனவணங்கு நேமமற வாதபிரான்

90 செபபரிய ஹஜஜு* வண்மை செய்கினற சக்காத்து*
முபபது நோனபும* முடிக்குந் தபோதனன்காண்

91 அயயா நபுலநோனபும* ஆசுரா நனோனபும*
நையாமல் ஆசார நனோனபு நோறபவனகாண்

92 வேதியாககுங கறறோாக்கும மிககோாககும பககீர்ககும*
சாதி யெவாககுமஅனன சதரம வளாபபவனகாண

93 புவிநாலு திககும புகழெலாங கொண்டாடும
கவிநா வலவர்கலிக் கஙகுலுக்கோர் சூரியன்காண்

94 பாரனைத்தும போறறும பராாசர் கொண்டாட
வீரவிக்ர மாறனென வெற்றிகொணட வெமபுலிகாண்

95 கோரப பறங்கி குலஙகளெலலாம வேரறுத்துச்
சூரத தனமிகுத்த சுததரண கேசரிகாண்

96 இரணிய கெர்பப இரவிகுல ராசன
தரணி புகழுந் தனுக்கோடி காத்தமுகில்

97 மகபதிக்ரீ டாதிபதி ம...............பதி
செகபதிந ராதிபதி செ ........ .....பதி

98 மூவுலகை யாளும முடிமனனர் போறறவந்த
தேவைரகு நாதேந்ரன சிந்தை களிகூர

99 அட்டகச மன்னமத யானைத் திரள்கோடி
வட்ட மிடுங்கவன வாசித் திரளகோடி

100 ஆரங்கி யாகஅண்ட கூடந் தகர்த்திடிக்கும
பீரங்கி கோடி பிடிகோடி தேர்கோடி

101 பச்சைக் கடகம பரியகலிக் கததுரூய்*
வச்சிரப் பந்தி வயிடூரி யககடுக்கன

102 சீனச சுருட்டுச* சிவந்தசக லாத்து*வெகு
மானச் சுளிகையங்கி* வச்ராஙகி* பொறசோடு

103 உச்சிதமாய்க் கட்டி யுரகத் துடனகொடுக்க
மெச்சி யிவன் நிக்காஹ்* வேந்தனென வேமகிழந்து

104 தண்டிகைமுன் பின்வெள்ளைச் சாமரைகா ளாஞ்சிகுஞ்சம்
அண்ட முகடுடைய ஆணைமேற பேரிகையும

105 நரகசின்ன மென்............., லை
குரகதமே நாகசர .............கயும

106 சொல்லரிய சாமித் துரோககண்ட தண்டயமும
வல்லமையாய் நலக வரிசைபெறற மனனவனகாண்

107 வேலிக கடல்புடைசூழ் மேதினியோர் கொண்டாடத்
தாலிக்கு வேலி சத்தசமுத் ராதிபன்காண்

108 முரசு முழங்குமணி முன்றிலான் மன்னர்க்
கரசுநிலை யிட்ட அதிக்மரி யாதையனகாண்

109 ஆசானு பாகன அ.. ...... ......த
தேசாதி பதியமுஞ சிஙகா .. ........ காண்

110 செல்வத துரைமகனகாண சேவகன்காண் சீவகன்காண்
பல்லக் கரசர் பணியும பதாமபுயனகாண

111 பூமே லிருககுமொரு பொனனினவிளக கேந்திரண்டு
மாமேரு வெனன வளர்ந்தெழுந்த திண்புயனகாண்

112 ஆவின வடிவு மளக.... ....மணி வடிவும
காவின கொடைவடிவும காட்டு........புயனகாண்

113 கடுத்துச் சினந்த... ... .......கதிர்வாள
எடுத்துக் கொடுவித் திருகை சிவந்தவனகாண்

114 சொல்வழுவப.. ......ராந் துயயகுமு தமசெனிக்க
நல்வசனத் தெளளமுத நலகுமுக சந்திரனகாண்

115 அருண கிரணவிமப வம்புயமபோல் யாவருக்கும
கருணை குடியிருந்த கணணனகாண கனனனகாண

116 வாளுககு வீமன்காண் வாய்மையரிச சந்திரனகாண்
ஆளுககு மனமதன்காண அறிவுக கத்தியனகாண்

117 பொறைக்குத் தருமன்காண புந்திக்கு மந்திரிகாண்
நிறைக்கும பெருஞ்செல்வ நிதயசுப சோபனன்காண்

118 கூறுச் சரக்குவிலை கூறிநிச மாயமதிககும்
மாறுச சவுபாகய வர்த்தக சிரோமணிகாண்

119 இனன தனமை யாகவந்த எஙகளபெரு மானெனவே
சொனனவுட னேபொருந்திச் சோபனமென றேமகிழ்ந்து

120 தமமி லிசைந்துவெகு சநதோட மாச்செனவே
செமமை யுடன்வலது செங்கை கொடுத்தபினபு

## பந்தற்கால் முகூர்த்தமும் மணவறை அலங்காரமும்

121 ஓதும பெரியோரும உறரோரும பெறறோரும
ஏதமில்லா நன்ன ளிதுவே முகிழத்தமென்று

122 மேள முழங்க விருதுசின்ன மார்பபரிக்கத்
தாள மதிரத் தவில்முரசு தாமகறங்க

123 ஏத்தரிய நல்லோரு மெல்லோருங் கையேந்திப்
பாத்திகா* வோதிப பரிந்து துவா*வோதி

124 நானிலமெல லாமதிகக நனமுகிழத்த வேளை தனில்
கானுல்வு செமபவளக காலெடுதது நாட்டினரே

125 மறுககலவாச செம்பொன வளைபரபபி வெளளியினுல்
குறுககு வளையதன்மேற கொண்டு பரப்பினரே

126 வச்ர மிழைதது வரிச்சுக களைபபரபபிப
பசசை மரகதததால பலகணிவா யில்வகுத்துச

127 செங்கனகக் கமபியினுல சேர வகுந்திறுக்கித்
தங்கததகட டால்வேயநது சாளரஙகள தாம்வகுத்தார்

128 மாணிக்கத் தாலே மணிக்கொடுஙகை தானசேர்த்து
ஆணித தரள மணியணியாயத தூககினரே

129 நீல மணியும நிறைநதகோ மேதகமுங
கோலவயி டூரியத்தின கோவையுடன தூக்கினரே

130 பொஙகொளிசோ கின்ற புருடரா கச்சரமும
எஙகுமொளி வீசு மிலஙகுபவ ளசசரமும

131 பதுமரா கசசரமும பததிபததி யாயததூககி
நிதிகுலவு முனமுகபபு நித்திலததில வேய்ந்தனரே

132 மல்லிகையுஞ செமபகமும வாயநதகுட மல்லிகையும
முலலையொடு பிச்சி முறைமுறையாய முன தூககிச

133 செங்கழுநீர வெண்டாமரை செநதாமரை பைங்கமலத்
துஙகுமலர் பாதிரிமந் தார மிருளவாசி

134 செவவந்தி பொறகொனறை செவவாமபல் மாதுளமபூ
அவவந்தி நோமலர்நத அழகியநீ லோறபலமும

135 இநதமல ரெலலாம இசைநதசர மாயதொடுததுப்
பநதரிட மெலலாம பரிநதுவி தா னிததனரே

136 பூஙகமுகின பாளைதெனனம பூவிரியுங காவிரியும
தேஙகதலித தாறுநிரை செவவிளநீர்ப பைஙகுலையும

137 மிச்சமெனறு கூறுமெலு மிசசம பழததுடனே
இசசகஙகொண டாடுஙகொ ளுஞசிப பழமபலாக்காய் (?)

138 வாழைப பழமும் வளர்தமாத தமபழமும
கூழைப பலாவின குடககனியுந தூக்கினரே

139 பொற்குடமபோல் வாய்குவிந்த பூமாது ளஙகனியும
பறபலசிங் காரமதாயப பநதரெஙகும் தூக்கினரே

140 கருமபுடனே பைஙகதலி காயககமுகு கொணடாடும
சுருமபுலவச செமபவளத் தூண்கடொறுஞ சோததினரே

141 மேகவண்ணப படடுடனே வீரவா ளிச்சேலை
வாகுபெற ருத்ரவனனி வாழ்சந்த்ர வனனியுடன

142 மாந்தளிர்போற் பூத்தொழிலின வனனமிகு சூர்யபடம
காந்திபெறும பொற்சரிகைக் கமபிக் கரைச்சேலை

143 வணணவணண மாக வகைவகையே கொயதுகொய்து
மினனொளிசேர் காவணத்தை மிக்கா யலஙகரித்தார

144 வந்தநவ ரத்ன மணவறையில் வெண்கிரணச்
சந்த்ரகலைச் சிங்கா சனமு மமைத்தனரே

145 தேகங் குளிரச் சிறுகொண்டல் வீசிவரப்
பாகங்க டோறும பலசா ளரமவகுத்தார

146 பக்கமெல்லாங் கோடி பகலோ னுதித்ததெனு
மிக்கநவ ரத்ன விளககெல்லாம நினறொளிரத்

147 தூண்டா மணிவிளக்குந் தூக்குவிளக் குஞ்சிறப்பக்
கூண்டா யிரங்கோடிக் குத்துவிளக கேறறினரே

148 தாரா கணங்கூடிச் சந்திரனைச் சூழ்ந்ததுபோல்
சீராச னஞ்சூழந்த சித்ரவிளக் கேற்றினரே

149 வன்ன மணியால் வகுத்த மணவறைமுன
பொனனி னிறைகுடத்தின பூம்பாளை சாயத்துவைத்தார்

150 பைங்கேழசிங் காசனமுன் பாவைதிகழ காவணத்தில்
சிங்காரம பார்ககவந்த தேனமொழியா ரோர்கோடி

151 கொண்டாடு மேனகைபோற் கோகனகை போலவந்த
வண்டாடுங் கோதை மடநதையர்க ளோர்கோடி

152 மாகத் தளாவு மணிக்கா வணமபார்த்துப
போகக்கா லேருத பொனனனையா ரோர்கோடி

153 வெணகுளிர்சந்த்ரோ தயமபோல் மேவியசிங் காசனத்தைக்
கணகுளிரப பார்ககவந்த கனனியர்க ளோர்கோடி

154 கட்டாணி முத்தாற் கனகத்தார செய்துவைதத
வட்டாவை யேநதிநிறகும மாஞர் சதகோடி

155 செபபேந்திப பூவேந்திச் சிததிரமபோல் நினறிலங்கக்
கொபபேந் திளமடவா ரோரா யிரங்கோடி

156 வஞ்சியிடை தளளாட வந்துபசுங் கிளளையொடுங்
கொஞ்சிவிளை யாடிநிற்குங் கொமபனையா ரோர்கோடி

157 இந்த வகையா யிலஙகுமணக காவணத்தை
விந்ைதவிநதை யாக விதானித திருந்ததற்பின்

## மணமகன் அலங்காரம்

158 அன்னைபிதா சுற்ற மனைவருமொன ருய்க்கூடி
மனனர் திலகம வகுதைமண்ட லாதிபதி

159 சறபுருஷ ஞயசெய்தக் காதியெனும பூபதிக்குங்
கறபுடைய மாதினுககுங கல்யாணஞ செய்யவென்று

160 சமபங்கிப் பூந்தயிலம தானமுடியிற கோதியம்பொற்
குமப நிறையுங் குளிர்மஞச னஞ்சொரிந்தார்

161 பூந்துகிலா லீரம் புலரப் புலர்த்தியபின்
வாய்ந்தபசும பொன்னுடை வர்க்கந் தெரிந்தெடுத்து

162 வன்னச் சுளிகை வரிசை நிசாரணிந்து
பொன்னினரை ஞாணுமவச்ரப பூட்டுமுருக் காணியிட்டுப்

163 பொனனமபர் கஸதூரி பூமபனனீர் சநதனமும
தெனனம புழுகுசவா* தெலலாம புயத்தணிந்து

164 தோற்றுமணி வசராங்கிச சோடணிந்து மேதினியோர்
போற்றி விலைமதியாப பொன்னினடுக கடடிறுக்கிப்

165 பச்சை மணியுதர பந்தனமுஞ் சேர்ந்திலங்கும
வச்சிரத்தி ஞலிழைதத வாகுவல யமபுனேந்து

166 வாகுபந்த னமபூட்டி வயிரத் துரு* அணிந்து
நாகரிகக் கைமேலே ரத்னகங்க ணமபுனேந்து

167 சிவரத்னத் தாலிழைத்த செயபவீர வாளியிட்டுக்
காவையொதத கைமேல் கரபந்த னந்தரித்துத்

168 தண்டரள மாலிகையுந் தஙகச சரப்பளியும
கண்டசர முமபொற் கனபதக்க முந்தரித்து

169 மாணிக்க மாலையுடன குங்குமத்தார் மார்பிலணிந்
தாணிக்கு வேளெனக்கண் ணுடி நிழல்பார்த்து

170 வீசுசரு வந்து*முடி மீதுஙவ ரத்தினத்தின
வாசிங்கம பூட்டி வயிரத் துருநிறுத்திப

171 பொன்னர மாலையிட்டுப் பூச்செண்டு கைபபிடித்து
மினனர் குரவையிட வெள்ளானை யேறினனே

## பவனி வருதல்

172 விடவரவி னுடனெளிய மிகுவடவை கெட இடறு
தடவிகட கெறுவமதத் தவளவெள்ளை யானையினன்

173 கொடியவிட வரவுபடக் குவடிடிய வடவைகெடத்
தொடுகடலி னகடுடையத் தோனறுவெள்ளை யானையினன்

174 மொகுமொகென அளிகுலவு முதிருமத சலமொழுகு
விகடரண முககலனே[6] வெள்ளானை யேறினனே

175 திடதிடென ......... நடவிகட செயவிசய
தடகரட மடையொழுகு தவளவெள்ளை யானையினன்

176 தடவிகட கரடகடத் தவனமது மொகுமொகெனத்
தடவிகட கரடகடத் தவள வெள்ளை யானையினன

*177–184* ஆம கண்ணிகள் எழுதிய இரண்டேடுகள இல்லை.

185 பிரசமுறு வாகைப் பெருந்தொடையல் சூடிவெறறி
அரசர்மக்கள் கோடிவெளளை யானை தனைச சூழந்துவர

186 ஆணியல்பு காட்டி அலகமபு சேர்சுரிகை
தூணியுமவில் லுமபிடித்துத தொட்டியர்பல் கோடிவரக்

187 கேடகஞ்செங் கோடி கிரணவடி வாளெடுத்துக்
கோடையிடிபோல் கோடி குதிரைரா வுத்தர்* வரக

188 கட்டியக காரர் கனவிருது கூறிவரப
பட்டவித் வாஙகிசர் பலதிசையுங கொண்டாடச

189 சநதிரனைச சூழந்துவருந் தாரா கணயபோல
முந்து கிளைஞர் மொகுமொகெனச சூழந்துவரத்

190 திமிலி தடாரி திடுமன கனகதபபுக
குமுறும பதலை குடமுழவு வீராணம

191 பேரிகை பமபை பெருமுரசு மல்லாரி
பூரிகை நாககுரம் பொஙகுகடல் போல்முழங்க

192 ஆனைமேற பேரி அதிருமிடி போறகறங்கக
கூனல்முது கொட்டையின்மேற கொணடடமமா னம்மதிர

193 எறறுங குதிரை யிடமமானக் தானகலிபப
வெறறிநா கேசமென(?) மேளமிக வாரபபரிப்பத்

194 தாரை நமரிகொமபு சத்தமிடு மெக்காளம
வீரகரு ணுவாஙகா வெண்சஙக முறதொனிபப

195 முத்துக் குடையு முழுவயிரப பொறகுடையும
பத்தியொளி வீசு பவளச செழுங்குடையும

196 செம்பொற் குடையுந் திகழும்வெள்ளி வெண்குடையும
சமபத்தில் வந்துபுவி தாங்காச் சமுத்திரமும்

197 சுற்று நிரைத்துவரத் தூயசிங்க கேதனமும
அறறமிலலா வீரவெளளை யானை நெடுங்கொடியும

198 பக்கம பிடிககப பலபேருந தாமசூழத
தககவியன மத்தளஙகைத தாள முழஙகிவர

199 வாயசசங்கு தித்திசுர மண்டலமுங் கினனரமும்
வேயுசசாங கிதமுமுக வீணை தணடை வாத்தியமும

200 வீணை கயிலாச வீணையிசை காமாட்சி
வீணைருத்ர வீணை விளங்குகிற தாவுடனே

201 சரமண்ட லமுடுக்கை சந்தரவளை யங்குளிற
நரமண் டலமபுகழும நலலிசையா தாமவணஙகத்

202 தாளம வழுவாமற சங்கீதந தானகறங்க
மேளம் வழுவாமல வீதிதொறுந தானமுழஙகக்

203 கண்டாரா கததுடனே கல்யாணி காமபோதி
கொண்டல்சொரி மேகக குறிஞசிசஙக ராபரணம

204 தோடி வராளி சுததநனனி யாசிகௌரி
பாடிசுதி கூடியிசைப பாடகாமுன பாடிவரச

205 சதத தளததிலெழு தாள முழஙகிவர
ஒத்தகுச சாதி யுயரசக கனிவுடனே

206 பரத முறை தபபாது பவுரிககேறபக்
கரதலததில நட்டுவன்மார கைததாள மொத்திடவே

207 நெருங்குஞ சிலமபாட நீளசதஙகை தாளுட
மருஙகுதுவண டாட மயிலார் நடமாடத

208 தங்கததீ வட்டி தயஙகுவெள்ளித் தீவட்டி
கஙகுல் பகலாக்கு மாறுகால் பநதமுடன

209 ஏணி விளககும ரதவிளககுத தனனுடனே
பாணி விளககும பகலவிளக்கும நினறிலஙகச

210 சூல விளக்குந துலஙகைநது கால்விளக்கும
ஞாலம விளக்கும பகலா மெனவிலக

211 பத்தியொளி வீசும பகலவத்தி நினறொளிரத்
தத்துதிரை போலுபய சாமரைக டாமிரடடப

212 பாவாடை முனவிரிககப பஞசவணணத் தால்விளங்கும்
பாவாடை வீசவியற பாவாணர கொணடாட

213 எஙகும புகழவெள்ளை யானைப பிடரேற்றி
மஙகளஞசெய் தூரைவல மாகவரு வேளைதனில்

214 வச்ரத் திருநாட்டு மன்னவன்செய் தக்காதி
பச்சைப் பரியான் பவனிவரும் வீதியெல்லாம்

215 தோரணங்கள் நாட்டிடுவார் தூபதீ பங்கள்வைப்பார்
பூரணகும் பம்பதிப்பார் பூம்பன்னீ ரால்தெளிப்பார்

216 வான்முகட்டுத் தோயும் மகமேரு நாட்டிடுவார்
தேன்முழக்கும் பூங்குறிஞ்சி தெருக்க ளலங்கரிப்பார்

217 இருகுரும்பை போலுமுலை யேந்திழையா ராடுதற்குத்
திருகுகம்பை நாட்டித் தெருவை யலங்கரிப்பார்

218 மெல்லியதண் புட்ப விமானங்கள் தம்முடனே
சொல்லரிய நீண்மகர தோரணங்கள் நாட்டிடுவார்

219 கைவந்த சித்திரத்தாற் கண்களிக்கச் செய்துவைத்த ?
பௌவந்தத் திற்சூத்ரப் பதுமைபிடித் தாட்டிடுவார்

220 ஆசைகொள்ளு மின்னு ரவரவர்கள் தாங்கூடி
வாசல்தொறும் நெய்விளக்கு வைத்துநிறை கும்பம்
[வைப்பார்

221 கன்னல் நடுவார் கமுகு நிரைத்திடுவார்
அன்னமென வந்துசெம்பொன் னுலத்தி யேந்திடுவார்

222 ஏருலவு தென்காய லெங்கள்செய்தக் காதிமன்னன்
பாருலகில் யானைப் பவனிவர மாதரெல்லாம்

223 பாடகங்கள் பூஞ்சிலம்பு பங்கயத்தாள் மீதணிந்து
சூடகஞ்சேர் காந்தளங்கை சுற்று மணியணிந்து

224 பட்டுடைமின் னுர்பவனி பார்க்கில்மதன் வாளிநெஞ்சில்
பட்டுடையு மென்றுமுலைப் பாரமிசை வாரணிவார்

225 நாணைவிட்டு மங்கலப்பொன் னுணணிந்து கையரத்தால்
சாணைவைத்த வாள்போல் தடங்கணுக்கு மையெழுதிப்

226 பொற்சரிகை மேலணிந்த பூம்பட்டு முந்திதனில்
பொற்சரிகை தொங்கலிடைப் பொய்யினில்மெய்
[யாயணிந்து

227 சித்தசனைபைந் தேனுறையுஞ செமபவள மீதிலொரு
முத்த ருமபினபோல் மூககுத்தி முத்தணிவார்

228 பொனமலேமேல வெளளிப புரிகிடந்து தாழுதலபோல்
வனமுலேமேல் முத்து வடஙகள கிடநதாட

229 மாலாழி நீநத வகையறியா மஙகைநல்லா
காலாழி பூட்டியபின கையாழி யிட்டனரே

230 தங்கச சவடிகளுங் தாளிழைதத பொறபணியும
பொங்குநவ ரதனவொளிப் பூடணமும மேறபுனைந்தார்

231 மச்சு ளிருக்கும மடவார்கள கோத்தமுத்துக
குசசு ளிருக்கும குளஞு லணியாடச் (?)

232 சொல்லரிய படடுச சுளிகைரவிக் கையணிந்து
எல்லமையுங கொமபனையா ரெலலோரும தாமகூடி

233 கொஙகைமேல் சந்தனக குழமபணிநது குஙகுமததைச
செஙகரத்தால் வாங்கித் திருக்கழுததின மேல்பூசி

234 முல்லையிருள வாசி முகிழமல லிகைகொழுந்து
அலலனைய கூநதற கழகா யலங்கரிததுச

235 சாரும் பவளங் தனைசசிவபபக காயச்சினபோல
சேரும படிபாககுத் தினறு சிறபபாகத

236 திலக மணிந்து திருமபத் திருமபியணிந்
திலகுவிரல் சேபப இருகண சிவநதிடுவார்

237 மொயகுழலை நனருய முடித்து முடிததவிழததுப
பயயமணிக் கணணுடி பார்த்துச் சினந்தெறிவார

238 பொறகடகம பூடடிப புரிவளையா ரெல்லோரும
கற்கடக மெலலாங கனராசி வெண்கொடிசோ (?)

239 கனனனெனன வநதசெயதக காதிமக ராசன அபாய
வனனமணி வீதி வருமபவனி கணடெதிர்போயக

240 கயங்காத செமபொற் கரததா மரைகடுபப
முயங்கா தெழுநத முகத்தா மரைமலர்கள

241 மேடை மிசையுமொளிா வெணபுரிசைச் செச்சையினும்
தேடரிய பொறசிகரத் தெறறியினு நினறேறி

242 உபபரிகை மீது முயாமா ளிகைமீதும
செப்பரிய பொனமாடத் தினமுகபபுஞ் சேர்நதுநினறு

## மகளிர் கூற்று

243 நனமதிலை யொட்டியதில் நாடிவைத்து நாணிநினறு
தெனமதுரைக கோனணஙகு சிங்கமோ வெனறுசொலவார்

244 சாளரஙக டோறுமவெகு சநத்ரோத யஙகளெனன
வாளரஙசொள கணணா வதனமவைததுப பார்த்து
[நிறபார்

245 மாறன மகடகு மணவாள னுகியினபப
பேறுதவுஞ செஙகை பிடிகக்வநதா னெனபாரும

246 இவா காகான* எனபாரும இந்திரனகா ணெனபாரும
தவருத வாய்மையரிச சந்திரனகா ணெனபாரும

247 செஞசந தனஙகளபம தேனொழுகுங் கொஙகைநல்லார்
அஞசமபு கொணடுவரு மடலமதனன காணுமென்பார்

248 மினனினிடை தளளாட வெண்டுகில்போய நிறபாரும
வனனவளை போயககை வளைககிரஙகி நிறபாரும

249 தாளழகைக கணடு தலைநாணி நிறபாரும
தோளழகைக கணடு துடிதுடித்து நிறபாரும

250 சீருலவப பொஙகுந் திருவடிவைப பார்க்கவெனறே
காரிகையார் கண்ணைக கடனவாஙகிக் கொளவாரும

251 கர்ணனெனற பேரைவிழி காட்டுமெனறு சொலவாரும
வர்ணமணி மார்பில் மதிமயஙகி வீழவாரும்

252 கந்தனிவ னெனபாரைக் கையமாத்தித தையலநல்லார்
செந்தலைச் செலவர்ககுச சிங்கவிரு தெனறுரைப்பார்

253 வாஞட் டரசு மகபதியொப பாமடவீர்
காநாட்டு வேந்தாபிரான கண்ணுட்ட மெத்தவென்பாா

254 காமனெனபார் காமனுககுக கஙகுல்மத யானையல்லால்
பானமொழியீர் வெளளைப பருபபதமே தெனறுரைபபார்

255 அன்ன நடையீ ரரிகே தனன்வகுதைக
கன்னன பெரியதமபி கணணினமணி காணும என்பார்

256 சேலை கவர்ந்தெமது சிந்தைகவாந் தானெனினும
மாலை வழஙக மனமிலைகாண எனபாரும

257 பொருமானை காததினிய பொனமானை ஓடியெயது
திருமானை வைத்தபுயன சீமானைப பாரும எனபார்

258 பசசைப பரியானைப பணணைப பரித்தானை
இசசைப படியே இனிபபாரும எனபாரும்

259 காலழகை வெளளானைக காது மறைத்ததெனச்
சேலழகாங கண்ணுர் சினந்துருக்கிப பார்ப்பாரும

260 நேராந தொடையை நிசாரமறைததுக் கொணடதுகாண்
பாரா யிதுவும பகைநமககே எனறுசொல்வார

261 இடையழகைப் பொனனரைஞா ணீணடுசுறறிக கொண்ட
[தெனறே
படைவிழியீர் மெயந்நாணைப பார்ககவிட்டீர் எனபாரும

262 வரைமார்பைக் குங்குமபபூ மாலை மறைத்ததெனறே
விரைவாகி மாலை வெளியாக்கி விட்டதெனபார்

263 தார்பபுயத்தைச் செஞசந் தனமஒளித்துக கொணட
[தென்றே
வார்திகழும பூணுர் மணிததனஙகள காட்டினநீர

264 கணடசர மெங்கோன கழுத்தை மறைதத தென்றே
விண்ட சரமாக மேலாடை நின்றதெனபார்

265 துலஙகும வயிரத் துரமுடியைச் சூழ்ந்ததெனறே
இலங்கும பெருங்காத லெனமுடி யாதுநினநீர்

266 மாலைக் குழல்சரிய் வச்சிரப்பொற கொபபசைய
ஒலைக குழையாடி ஓடிவநது பாரபபாரும

267 செலலுலவு சொநதாள திரளால தெரியாமல்
மெல்ல விழிமேல் விரலடுககிப பாரபபாரும

268 தரிக்குஞ சவாது* மணம தானவீச வந்ததெல்லாம்
பரிககுமிதழச செங்கமலப பாவைமணம வேண்டிஎனபாா

269 கஸதூரி வாசமெழு காதமட்டும வீசநம்மை
முத்தாரப பூணமுலேயாா முகமட்டும என்றுரைபபார்

270 ஓஙகுசனங காணநமமை ஓடாதிப போதானே
தூஙகலென நினறு துரிதநடை பாரும எனபார்

271 வெற்றிப பகலோனே மேக மறைத்ததெனக்
கொறறக குடைமறைததுக கொள்ளுமோ என்றயர்வார்

272 வந்தானே மூாகக மதயானே முனனடக்க
முந்தானே விட்டு முலேயானே காட்டிநிற்பாா

273 வாயமழலேப பிள்ளே மதிபோலும் பேதையர்கள்
தாயர்தலைமக குஙகுமபபூத் தாாவாஙகித் தாரும் எனபார்

274 உண்டிலலே யெனனுமிடை யொனறியுமொன ருயச்சோர
வெண்டரளஞ சேர்பெதுமபை மின்னாாகள சூழ்ந்துவர

275 வண்டணுகாச் செவவாய மலரவிழுந் தாமரைபோல்
கணடமட மங்கையாகள் கண்குளிரப பார்ததுநிறபார்

276 கரிககொமபு போலுமுலேக கண்மடந்தை மார்கூடி
நரிக்கொமபு முளள நயககார னெனபாரும

277 அங்கசனபோ ராடு ,ாரிவைமாா குமபமுலே
எஙகும பசுந்தேன இனங்கறுகக வந்துநிற்பார்

278 திக்கில்மதன செஙகோல செலுததத தெரிவைநல்லார்
கைககளிறே நாஙகள பிடிகாணு நில்லுமென்பார்

279 விரவி அமுதெடுத்த வெண்பாற் கடல்நிகர்ப்பப்
பெருகுசுகங் கண்டுவந்த பேரிளம்பெண் ணார்சூழ

280 இவவாறு மினனு ரியமபவகு தைக்கிபன்
அவ்வீதி விடடங கடுததொரு வீதிவந்தான

281 ஓஙகுபீ ரங்கி ' உருமேறு போலமுழஙகத்
தாஙகிய துண் டுககுழலுஞ சத்தவெடி யுமமதிரக்

282 கும்பவெடி செந்திக குடுக்கைக்க கலசவெடி
அமபுவெடி பூமி யதிரு மிரட்டைவெடி

283 கைகநூழலும பட்டைக கனகுழலாங் தாயககுழலும
ஒககமருந திடடோ ரொருமுகமா கத்திர

284 பூசசகர வாணமெலலாம பொறபூச் செறுநபோல
மாசசகர வாணநெடு வானி லொளிபரபப

285 மோகார மணட முகடுடைததுச சிநதுதல்போல
ஆகாச வாணத தடங்குகணடங் கொபபுளிபபக

286 கொமபடைபபுச சக்கரமும கூட்டு மிசுககுடனே
அமபரததில கெமபி யடர்ந்தேறுஞ சக்கரமும

287 சொல்லும படைவாணம குமாரவா ணத்துடனே
செல்லும எலிவாணஞ சீறுமபாம பினவாணம

288 பூதவா ணஙகள பொருமபரிசை வாணமுடன
வீதிநிறை யசசொரியும வெண்சா மரைவாணம

289 மைபூத்த விணணில மணிநீலம வீழவனபோல்
கையிற பிடித்தநிலாக காயாமபூச சிநதினவே

290 கமபல்வா ணங்கள கனகுதிரை வாணமுடன
குமபல்குமப லா யசசொரியும் கூடைப் பெருவாணம

291 ஆடுமயில் வாண மதிருநிலாச் சக்கரமும
தேடுகுமப வாணஞ சிரட்டைவா ணத்துடனே

292 மண்டு விசிறிகளும் வாய்த்த நிலாவெடியும
குணடணி வாணங் குறித்தகம்பத் தூடுசெல்ல

293 ஒருகோடி சூரியர்க ளோடித் திரிவனபோல
திருகாடிக கமபத் திரியெல்லாம நினறெரிய

294 நிரைத்த படைக்கு நிலாவெறியு மேழ்கடல்போல்
இரைத்து டபீரென் றிடியேறு போல்முழஙகக்

295 கமபவா ணக்காட்சி கண்டு களிகூர்ந்து
செமபொனமுடி பூலோகத் தேவேந்தரன வந்தனனே

296 கலவிக் கருணைக கடல்பெரிய தமபிபெறற
செலவனவநதா னென றுவெறறிச சின்னம் பணிமாற

297–304—ஆம கண்ணிகள எழுதிய இரணடேடுகள இலலை

305 சந்தா டவிசுரபி சஙகநிதி பத்மநிதி
சிநதா மணியெனபபெற ஙின னம பணிமாறப்

306 பாவடிவைக கூடற பதிவடிவே லானருேட்பூஞ
சேவடிவைத தோனெனபபெற சினனம பணிமாற

307 உறைவாஙகு வாடகை யுடனவாஙகி யொனனலரைத்
திறைவாஙகும போசனெனச சினனம பணிமாற

308 வங்காரக கொங்கையர்கரு மணமாலை நலகுமெனச்
சிஙகாரக காரனெனச சினனம பணிமாற

309 வெஙகளிறறு மேலவர்கள வெமபோா கடந்தவெறறிச்
சிஙகமவந்தா னென றுசெமபெற சினனம பணிமாறக

310 குஙகுமத்தார் பூண்டு குவலயத்தார் போற்றுநல்ல
சிஙகமவந்தா னென றுவெறறிச சினனம பணிமாற

311 இனனபடி சினன மியமபிட்டு வெளளானை
தனனை யிறங்கித தருகா வணததில்வர

## மணமகன் மணவறை சேர்தல்

312 வாய்தத மணவாளன வநதா னெனமகிழ்ந்து
சேதத மலரடியார் சிற்றடியா ரையேவ

313 மாரன ரதியெனன மங்கையரிந்த ராணியெனன
ஆரமணி கற்பூர மாலததி தானெடுத்தார்

314 மங்களவாக் யமபடைக்த மாபபிளைரா சேந்தானுக்குப்
பங்கயபபூந் தாளநடககப பாவாடை யிட்டனரே

315 இட்டபா வாடையினமே லேகியரி யாசனத்தே
அட்டமஙக ளமமார்பப ஆணமகன வீறறிருந்தான

316 சிஙகா சனததிருந்த செல்வமண வாளனுககு
மஙகா வதிரூப மானா எதிரநடந்து

317 பாதாம புயமவிளக்கிப பனனீர மிகசசொரிநது
பீதாம பரததாற பிரசமலர்த தாளதுடைத்துச-

318 செயயு முறைமை செயதுவெறறிச சிறறடியார்
மெயயில வெயாவருமப மீள நடநததறபின

## மணமகள் அலங்காரமும் மணவறை சேர்த்தலும்

319 சுந்தரனுசோ பூங்கொடியைத தோழிமா ரெலலோருும
வநது மனமகிழநது மஞசனநன னீராட்டிப

320 பொனனுக கலஙகாரப பொனனிறைல செயதசெனனத்
தனனிகரில் லாத சரிகைபபூம பட்டுடுத்திப

321 பாணிககு மேலழகு பாணிதது வைததசெனன
மாணிககப பொற்கட்டு வசரமணிச சட்டையிட்டுக

322 கூந்தல தனேயொழுஙகாயக கோதி மலாமுடிததுச
சேநத கரததிற றிருசசூளி யநதரிததுக

323 கனனல் மொழிமடவார கறபுடைக காரிகைககுப்
பினனல தரிததுப பிறையுந திருவுமவைத்துப

324 பற்பரா கததுடனே பசசைவசு சிரநீலக
கறபதித்த சுட்டிவட்டங கட்டி யலங்கரிதது

325 மணியினலுக குத்து மரகதப்பூக கொபபுமணி
அணிஞசுலுககி யாவும அரசிலைபபூத தொஙகலுடன

326 ஒன்னபபூ வசர முபயகண் ணுடியொதத
கனனத்தில் நினறிலஙகக் காதுக கணிநதனரே

327 இனனவிலை யெனறுரையா வீத்தஙகாச செமபவளப்
பொனனசர விககோவைப பூட்டுஞ சரபபளியும

328 தும்பிப பதக்கம துலங்குங கிளிபபதககம
அம்புவியெல லாமதிக்கும ஆளிமுகத தாளிவில்லை

329 வனனிககுஞ செஙகனக மாராடிக கொததுவடம
கன்னிக் கழுகனைய கந்தரத்தின மீதணிந்து

330 பொன்னரிசு தோள்மூடி புசபந்த னத்துடனே
தன்னிகரில் லாவளையும் தரத்துமணி யட்டியலும்

331 முன்கைவளை ரத்னசரி முங்துசந்து காறையுடன்
மின்மருவு பொன்மணியும் மேவுபச்சைப் பொற்கடையம்

332 திக்கெட்டு மொன்றுகிச் செப்பி விலைமதியாக்
கற்கட்டு வச்ரங் கரமதனி லேயணிந்தார்

333—336-ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை

337 தண்டை சிலம்பு சதங்கைதங்கப் பாடகமும்
வெண்டரளந் தாரகைபோல் மேல்முடிச்சுச் சங்கிலியும்

338 கட்டுசரம் பொற்பீலி காலாழி செம்பொன்னும்
மெட்டு மயிலடிகால் மெல்விரலில் தூக்கினரே

339 காவடர்ந்த மாவிடத்திற் காய்த்துப் பசந்தபிஞ்சு
மாவடுவை வென்ற வரிவிழிக்கு மையெழுதிப்

340 பொன்னுக் கணிகலனும் பொன்னமுதை மற்றுமின்னார்
கண்ணெச்சில் தீண்டாமல் கஸ்தூரி யாற்பூசித்

341 துலங்கிஅச ருப்*பூத் தொடையல்கட்டிப் பொன்போல்
அலங்கரித்துக் குப்பாய மன்பாக வேபோற்றி

342 அருந்துதிபோற் கற்புடைய அன்னநடை மின்னரசைத்
திருந்துமட மாதர் சிறப்பித்து வைத்தபின்னர்ப்

343 பந்தலிலே மிக்கநகர்ப் பார்த்திபரு மாதுலரும்
தந்தையரும் நல்லோருஞ் சாதிப் பெரியோரும்

344 கற்றவரும் வேதியரும் காலியா*ரும் வந்திருந்து
குற்றமில் லாத குறித்தமுகிழ்த் தந்தனிலே

345 சொல்லரிதாங் கொத்துவா* வோதிப் பொருளிசைத்து
வல்ல மிசுறு மொகரா* எழுதினரே

346 நிக்கா வெழுதி நிறைந்த களரியெல்லாம்
ஒக்கவே பாத்திகா ஓதிப் புகழ்ந்தபின்பு

347 சீவிவைத்த பாககுஞ சிறநதவெளளை வெற்றிலையும
நாவி சவாது* நறுமபுழுகு சநதனமும

348 வெள்ளியின்வட டாவில் விளஙகுதஙக வட்டாவில்
அளளிஅளளிக் கையால அவரவாக்கே தாமகொடுததார்

349 உலமாககள்* ஆலிமகள* ஓதுகினற வேதியர்களும
அலமாபபுத தீரபபொன ஞடை மிககொடுத்தார்

350 செவவி முதியோாகளும் தீஞேக்கு மாதுலாகளும
இவவரிசை யெல்லாம இயலபாகச் செயததறபின

351 பூபபிளளை நிர்த்தமிடு பொனமணிசசிங காசனததை
மாபபிளளை ராயன மகிழநதிருகக மாதரசைப

352 பொறசரோ ருகமாஞப போறறருமை மாதுலஞல
கறபுடைய மாதைக கணவனவல மாகவைததார்6

353 கனனிகையும வந்து கணவன வலததிருகக
மினனிடையா ரெல்லோரும விழிகுளிரப பாாததுரைபபார

## மணமக்களை வியந்து உரைத்தல்

354 பெணணழகைப் பாரும பெருவிரலைப் பாருமிரு
கணணழகைப பாருமிரு கையழகைப்பாருமெனபார்

355 பெண்பெற்ற பேறும பெருமான றனைககாணக
கணபெறற பேறுமினறு கணடோம எனமகிழவாா

356 திருமானைக காணவரு சிந்தை களிகூரப
பெருமானைக காணநல்ல பேறுபெறரே மெனபாரும

357 மினனழகு மினனை விருமபுந துரைபபெருமான
தனனழகைப பாருஞ சமானஞ சமானமெனபாா

358 கனனி யழகுங கணவனழ குமபாாககப
பினனு மிருநாட்டம பெறறிலோம நாமெனபார்

359 வல்லமண வாளன மதயானை கைப்பிடிக்கும
செல்வம் படிந்த திருவடிவைப பாருமெனபார்

360 கூர்த்தடஙகண மானழகுங் கொறறவனூர் தமமழகும
பார்த்து நமககதிக பாககியங் காணெனபாா

361 செலவந தழைபபீா சிறபபாக வாழந்திருபபீர்
மலவளர்ந்த திண்புயதது மைந்தரனே கமபெறுவீா

362 தேனையும மனனா திலகனையும தாமபோறறி
மானை நிகர்விழியாா வாழததித துவா்வோதிக

363 குணமாக வெல்லோருங கூடிக குரவையிட[7]
மணவாளன றனகையால மஙகலியங கட்டினரே[8]

364 ஆளவீரன ரதனமணி யாசனத்தி னினறிறஙகி
வாளபோல விழிநுதலில வடடப பணமழுததி

365–368-ஆம கணணிகள எழுதிய ஏடு இல்லை

## மைத்துனர் நகையாடல்

369 தாளபிடிககு மொனனூா தளத்திலொரு சிஙகமெனருல்
வாளபிடிக்கக் கூசுவதேன வாருமெனபாா
[மைத்துனர்கள

370 ஏவாகள நாயகமா மெஙகள மணவாளன
பூவாளைக் கையில் பொருநதப பிடியுமெனபாா

371 மைத்துனனமாா செஙகிரண வாளபிடியும எனறுசொல்லச்
சித்தமகி முசசரசம செபபக களிகூர்ந்து

372 பினன மெவரைப் பிளக்கு...........மது
முனனமே வாளின முனைநோககும எனறுரைத்தார்

373 மையலிலே சிநதையுறு மாறறலரை வெனறவரோ
கையிலே வாளபிடிககக காணேம எனவுரைபபார்

374 மதிகொண டடையாரை வெனறமண வாளன
கதிரகொண்ட கூரிலைவாள கையிற பிடியுமென்பார்

375 மாறறலரை வெல்லுவது மாத்திரமல லாமலெம்முன்
கோறறெடிகை வாளபிடிககக கூடுமோ எனறுரைப்பார்

376 மைத்துனனமா ரிந்த வழக்குரைகக மாருத
சுத்த ரணவீரத தோழா மறுத்துரைபபார்

377 தென்னவனை வென்றரண சிஙகமெஙகோ னிச்சிறிய
கன்னியாகள் முன்னே கதிரவாள பிடிபபதெனபார்

378 கோதைவடி வேலெடுதது கொற்றவனென றெண்ணுமல்
பேதையர்கை வாளைப் பிடியு மெனவுரைத்தீர

379 கடவா ரணந்தகர்தத கைவாளை வீரனையும
மடவார்கள் முன்னே வடிவாள் பிடியுமென்றீர்

380 என்ன இவர்க ளியமப மனமகிழநது
மன்னவர்கோன் கீர்த்தி வழஙகுந் துரைப்பெருமான்

381 பூவையர்கள் செவவாய புதைத்துக் குரவையிடக
காவலவன செஙகதிர்வாள கையிற பிடித்தனரே

382 மஙகையர்க்குங காதில வரிசைபல உளளதெல்லாம்
சங்கைபெறச் சொல்லித தடக்கைவாள வாஙகினரே

383 வாகைக் கதிர்வடிவாள வாஙகியபின மானையண்ணல்
பாகை திருபபிப பகருவார் பாவைநலலார

384 நனமைமண வாளனையும நங்கையையும கண்குளிரப
பொனமயி லார்கள புகழ்ந்து புகலலுற்றார

385 பேர்பெறுவீர் வாழ்வு பெறுவீர் மகப்பெறுவீர்
சீர்பெறுவீர் எல்லாச சிறபபு மிகபபெறுவீர்

386 என்றுமிக வாழ்த்தி யிதயங குளிர்ந்தமின்னூர
மன்றல் மகிழநயதது மனனனைப்பார்த தேதுசொல்வார்

387 சோதிக கிரணத் துலஙகுமணித் தொட்டிலிலே
சாதிக்கு நாயகனுய்த் தானவளாந்த மனனவனகாண்

388 பொன்னுரு மண்டபத்தில் பூபபந்தல் நனனிழலில
மின்னூர்கள பாராட்ட மிககாய வளாநதவனகாண

389 சந்த்ரவத னன்பெரிய தமபிமரக் காயனவன
மைந்தனெனப பெற்று வளாதத மறபபுலிகாணு

390 அய்யமற வன்னைசுற்ற மனபாக முன்னுளில்
செயததவ மொன்ருயத திரண்ட முழுமணிகாண்

391 பொருதூ மடமுந்தவொன்னர் போர்க்களத்தி லேயே
விருதூது வாரவரை விருதுகண்ட மனனவன் காண்

392 மருவார்கள கண்டு வணங்கமருக கூந்தல்
மருவாருங கொங்கையர்சேர் மாரக்கண்ட னவன்காண்

393 ஐயனைக்கண் டிவவா றதிசயித்து மஙகைநல்லார்
கையெடுத்து மூக்கில்வைத்துக கனனியைபபார்த் தெனச
[சொலுவார்

394 செமபதுமம விட்டுச் சிறந்தநவ ரத்னமொளிர்
ஜமபொனமதில் வீடடிலவந்த அருமபொருளைப் பாரு
[மென்பார்

395 காதழகு மூக்கழகுங் கண்ணழகும வெண்ணகையும
சீதமணி வாயழகுஞ செஙகமலங் காணு மென்பார்

396 கந்தரமுந் தோளழகுங் கையழகு மெய்யழகும
சுந்தரமும வேறுவமை சொல்லவரி தெனறுரைப்பார்

*397–404—ஆம கண்ணிகள் எழுதிய இரண்டு ஏடுகள் இல்லை.*

## வரிசை வழங்கல்

405 விறுப்பாறு பாயகடலில் வியாபாரி யாகுமெங்கள
கறுப்பாறு காவலவன காணுங் கறுப்பாறும

406 ஆர்கலியுந் தீர்பபதாக யாகவீ ரொக்கமொரு (?)
தூர்கலிய மும்வகுதை யூர்ககபா ணங்திகழும (?)

407 மோகரங்கள் வாரி முயன்று வருமபடகும்
சாகரங்கு லாவிவச்ரந் தாங்கி வருஞசுலுப்பும

408 மதிச்சோஙகு பசசை மரகதத்தாள கொண்டுவரும
புதுசசோஙகு செநநெல் பொருபபொன று தோணிகளும்

409 உணமையுடன வெள்ளி உருபபியா ஏறறிவரும
வுண்மைபெறு கினற வளமுமவள மாயக்கொடுத்தார்

410 விடாத செமபொன்மணி வீடுங் கொடுத்துநிதம்
நாடா துலாநிகழும நல்லவெளளை வாரணமும

411 கடக்குமலை வீசு கடலை யெடுததுறிஞசும்
நடக்குமலை போலவரும நல்லவெளளை வாரணமும

412 கவடிகளமெய பாயக் கவடிவைத்துத் தாவும
கவடிவைத்துத் தாவுங (?) காமா குரகதமும

413 முந்து பதுமை குடியிருக்கும மொய்மபனுக்குத்
தந்தச சிவிகை தனிசசிவிகை யுஙகொடுத்தார்

414 நாடோறுங் கீர்த்திகொண்டு நானிலததில் நாவலாகள
ஏடேற வந்தவனுக் கேறுகன தண்டிகையும

415 சருவந்து* பூமுடியும தங்கச் சரப்பளியும
பருவந்தப் பாதுதவிர பாங்கான தோள்மூடி

416 முனகை முதாரி முழுவயிரப் பொற்கடகம
நன்குபெறு செமபொன நவரத்ன மாலிகையும

417 துய்யகதிர் முத்துத துரய்*பதககம கண்டசரம
செய்யவிர லாழியருஞ செம்பொனனுல் தோள்வளையும

418 மாணிக்கச் சட்டை வரும்பொற் கபாயகள*மற்றும்
பூணத் தகுவதெல்லாம பொற்பாக வேகொடுத்தார்

419 வரிசைபெற வாஙகும வருமபெரிய கத்திவட்டப்
பரிசை யுடனே பருவாளுங கைக்கொடுத்தார்

420 நீளுமுனை காட்டிபெழு நேரிசமுங கைவேலும்
ஆளு முனைச்சுரிகை ஆயுதமுந் தாங்கொடுத்தார்

421 வேளாஞ் சினேகவடி வேந்தர்முடி வேந்தனெனக்
காளாஞ்சி குஞ்சங் கனமிகுவெண் சாமரமும

422 பொன்னிட் டகபடை புதுசசித்ர வெள்ளிமிடா
மனனுமிரு கால்சோ மணிவயிரப பாக்குவெட்டி

423 செமபொற கரண்டகமும சீவிவைத்துத் தானமுடியும்
பைமபொனமுடி சீருமுதல் பாஙகாக வேகொடுத்தார்

424 விற்பூட்டுப பெடடகமும மேவியொளி சேர்கனகப்
பொறபூட்டுப பூட்டிப பொருந்துநிலைப பெட்டகமும

425 வெள்ளியினுல் சுதது விளக்குடனவெண பட்டுமெத்தை
கொளளுந் தழுவணையும கூறுசப்ரக் கொளகையுடன

426 கூறிய பொறகொடடுக் கூடைதங்கச சட்டுவமும்
வீறிய காந்தியெஙகும வீசுவெள்ளி வெண்குடமும

427 பொன்னரிககளு சட்டி புதுசசித்ர வெள்ளிமிடா
மனனு சிறுகுடஙகள வாயகுவிந்த பொறகலசம

428 மாந்தளிர்செம பட்டு வருமேக வர்ணியுடன்
ஏந்துபுளளிப படடோ டிளமா துளிர்சேலை

429 இர்சைக கினிதா யிசைந்த மணிககிணஙகிப
பர்சைக கிளியுமுந்தப பஞசவாணப பூஙகிளியும

430 பலமணிக ளிடடாடும பலலாங குழியுமினனுர்
நலமணையி லாடும நவரத்ன வமமணையும

431 உமிழும படிக்கம உயர்படிகக முங்கலமும
கமலப படிககம காளாஞசிச சேனையககலம

432 கட்டிவருஞ் செமபவளக கட்டில்தலை காணிமெத்தை
இட்டமக லாதே யிருககவந்த பாஙகியரும

433 தாளடியில் நின்று தலைபணிந்து வேலைசெயயப
ஆளடியா ராயிரமும ஆணடியா ராயிரமும

434 செபபுங்கைய லார்நினைநத சீவரதனம வைககுமுத்துச்
செபபுந் தாலா*வும செய்யபொனனின வட்டாவும

435 சிந்தைமகிழ கினறதந்தச் சீபபுஞ் சிணுக்கரியும
வந்தவரைத் தனனிடத்தில வைககுமநலல ார்கொலியும

436 நாககுத் திருநதுமொழி நஙகையருங கொஙகைகொணடு
மூககுத திருந்த முழுமணிபபொற கெணடிகளுட

437 பெய்தககால கொநதி பெருகுதஙகப பளளையம போற
செயதக்கால நனமையெனச சேனைக்கா லுஙகொடுததார்

438 பூஙகா வனமுட புதியதெனனஞ சோலைகளும
நீஙகாமல மஙகையாகள நீராடும வாவிகளும

439 பாலுக பெருமை பசுமாடும ஆடுகளும
மேலுககு மேலுமெணணி விறுபெறத் தாயகொடுததார்

440 வையம மகிழநதிடநன மாம வொழுநதிருநது
செய்யும வரிசையெலலாம செயதோம எனககொடுத்தார்[9]

## வாழ்த்துரை

441 இந்த வரிசைபெறற ஏநதிழையு மனனவரும
மைந்தர்பதி ஞறும வகையாகப பெறறெடுபபீர்

442 பொனனு மணியும பொருந்துதல்போ லேபொருந்தி
எந்நிலமுந் தானவாழ எபபோதும வாழநதிருபபீா

443 நன்றி பெறுவீா நயமபெறுவீா ஆண்பெறுவீர்
எனறுந் துனியாவில்* ஈமான* மிகபபெறுவீர்

444 குனறில் விளககாயக குலவிளககாய் ஓஙகிநிலை
நினற பெருமபுவிமேல் நீடூழி வாழ்ந்திருபபீர்

445 துயய ஈசுப° துணையாம சுலைகா°போல்
வய்யநடு எந்நாளும அன்பாக வாழ்ந்திருப்பீர்

446 சுலைமா° னனனபியும தோகைபல கீசையும°போல்
அலையாத செல்வமொடும அழகாக வாழ்ந்திருபபீர்

447 மனருட்ட முளள மகமமது° கதீஜா°போல்
நனறு யிருவீரும நலமாக வாழநதிருப்பீர்

448 விளங்குமஅலி யுல்லாவும° வீவிபாத்து முத்தை°
[யுமபோல்
வளங்குலவ மேனமேலும வாகுபெற வாழ்ந்திருபபீர்.[10]

# திருமணவாழ்த்து

## குறிப்புரை

1. வகுதாபதிககிறைவன—வகுதாபதிக்கு அரசன். சீதக்காதி வள்ளலை வகுதாபதிக்கு அரசன் என்று சிறப்பாகக் கூறியுள்ளார். வகுதா எனபது வகுதை எனறும வழங்கும. இப் பெயர் பகதாது (بغداد) நகரைக் குறிக்கிறது. அந் நகர் அறுநூறு வருடகாலம அப்பாஸ கலீபாக்களின தலைநகரமாக விளங்கியது. முஸ்லிமகளுள பலர் பக்தாதுபட்டினத்திலிருந்து தமிழ நாட்டில் குடியேறியதாகச் சொல்லபபடுகிறது. அஙஙனம் குடியேறியவர்கள தம் பெயருக்கு முன வகுதை எனறு சேர்த்துக் கொளவது வழக்கம. சீதக்காதியின முன்னோர்கள் பக்தாது நகரத்திலிருந்து தமிழநாட்டில குடியேறியிருக்கலாம.

2. தசாங்கம அரசியலுறுப்புக்கள்: அவை பல விதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. நகரம, நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி எனறும், யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, செங்கோல், முரசு, தார், கொடி எனறும கூறப்படுகிறது.

3. கறுப்பாறு காவலவன இதன் விவரம் தெரியவில்லை.

4. செமபிநன்னாடு செமபிநாடு இவை சம்பா நாட்டைக் குறிக்கும். சமபா என்பது கம்போடியா, இந்தோ-சைனா பிரதேசத்தைஅடுத்துள்ள நாடு. சீதக்காதிபுகழ் எண்டிசையிலும் பரவியிருந்தது; சமபாநாட்டிலும் அவர் பெருமை விளங்கியது என்று புலவர் பாராட்டுகிறார்.

5. வச்ர நன்னாடன், வச்ர நாடு பஸரா பிரதேசத்தைக் குறிக்கும். இது பஸரா, கூபா நாடுகளிலிருந்து தமிழ நாட்டிறகு முஸ்லிமகள குடியேறியிருக்கிறார்கள் எனபதைக குறிபபதுடன, சீதக்காதி சிறப்பாகப போற்றபபட்டிக்கிறார் என்பதையும் தெரிவிக்கிறது.

6. முககலனை இதன் பொருள் தெரியவிலலை.

7. மகளிர் விசேட காலங்களில் நாவாற் குழறி இடும் மகிழச்சி யொலி.

8. மணவாளன கையால் மாங்கல்யம கட்டும் வழக்கம தமிழ் நாட்டில் சில பாகங்களில் முஸலிமகளுக்கிடையே வழங்கி வந்தது என்பது இந்நூலினுல் தெரிகிறது.

9. மணமகளுக்கு வரிசை கொடுத்தல் தமிழ்நாட்டுப பழக்கம. க்லியாண காலஙகளில் மாமன்வரிசை மிகமுககியமானது.

10. வாழத்து நூலின இறுதியில் மங்களம சொல்வது தமிழ் மரபு. இங்கு இஸலாமிய முறைபபடி வாழ்த்துச் சொல்லப பட்டிருகிறது.

## அரும்பதவுரை

அரிகேதனன் - சிங்கக் கொடி உடையவன்
அரிவை - 19 முதல் 25 வயசு வரை உள்ளவள்
அல - இரவு, இருள்
அளி - வண்டு
அனந்தர் - நித்திரை மயக்கம்
ஆசானுபாகன் - முழங்கால் வரை நீண்டுள்ள கை உடையவன்
ஆர் - ஆத்திபூ
ஆழி - கடல், மோதிரம்
ஆள்நாகரிகன் - நாகரிகம் உள்ளவன்
இக்குவேள் - கரும்பை வில்லாக வுடைய மன்மதன்
உதரபந்தனம் - அரைபபட்டிகை
உரகம் - நாகமல்லிகை; வெற்றிலை
உலாந்தா - 'ஹாலண்டு' தேசம்
ஒன்னார் தளம் - பகைவர் சேனை
ககனம் - ஆகாயம்
கங்குல் - இரவு
கசம் - யானை
கஞ்சமுத்து - தாமரை மணி
கந்தரம் - கழுத்து
கம்மியர் - கம்மாளர்
கரபந்தனம் - கையில் அணியக் கூடிய ஆபரணம்
கருணா - ஒருவகை வாத்தியம்
கருபபு - கரும்பு
கலணை - சேணம்; இங்கு யானை மேல் அம்பாரிக்கு வந்துள்ளது
கலி - வறுமை, துன்பம்
கவடி - ஒருவகை விளையாட்டு
காசறை - கஸ்தூரி
காநாடு - கற்பகம் உள்ள தேசம்; தேவலோகம்
காளாஞ்சி - தம்பலம் துப்புங் கலம்
குஞ்சம் - பூங்கொத்து
குப்பாயம் - சட்டை
குரகதம் - குதிரை
குளிற - ஒலிக்க
கூடற்பதி வடிவேலான், பாண்டியன்
கொட்டுக்கூடை - பாத்திர வகை
கொண்டல் - மேகம்
கோகனகை - லக்ஷ்மி
கோட்டால் - உச்சியினால், சிகரத்தால்
சங்க்ராமம் - போர்
சரோருகம் - தாமரை
சாளரம் - ஜன்னல்
சித்தசன் - மன்மதன்
சிரம் - தலை
சிராசனம் - ஓர் ஆசனம்
சீனச்சுருட்டு - சீனதேசத்துப் பட்டுவகை
சுரபி - காமதேனு
சுரிகை - உடைவாள்
சுரும்பு - வண்டு
சுலுப்பு - கப்பல்
சுளிகை - ஒருவகை அணி
சூடகம் - கை வளை
செங்கமலை, லட்சுமி
செச்சை - தங்கியிருக்குமிடம்
சேணைக்கால் - குடதீபத்தை வைக்கும் கால்
ஞாலம் - பூமி
டம்மானம் - டமாரம்
தண்டிகை - பல்லக்கு

தந்தி முத்து - யானைக் கொம்பின் முத்து
தமரத்தம்பழம் - ஒருவகை மரத்தின் பழம்
தரளம் - முத்து
தழுவணை - திண்டு
தாபநித்தோன் - நிலைநாட்டியவன்
திரு - பழைய தலையணி வகை
திருச்சூளியம் - அணிவகை
திரை - அலை
துகில் - வெண்பட்டு; துகிற்கொடி
தெம்முனை - பகைவர் முனை; போர் செய்யுமிடம்
தெரிவை 25 முதல் 30 வயசு வரை உள்ளவள்
தென்னன் - பாண்டியன்
தொங்கல் - மாலை
தொடையல் - மாலை
நமரி - எக்காள வகை
நராதிபதி - அரசன்
நித்திலம் - முத்து
நிதக்கத்து உள்ளார் - தினமும் (துன்பத்தால்) கத்து தலை நினைக்காதவர்களாகிய
நேமம் - நியமம்; விதி
நேரிசம் - எறிபடை
பதலை - ஒருகண் பறை
பந்தி - வரிசை
பலகணி - ஜன்னல்
பள்ளயம் - உண்கலம்
பாடகம் - மகளிர் காலணி
பாத்த - பரவிய
பாவடி - அங்கவடி
பிரசம் - தேன்
பிரசமலர் மான், லக்ஷ்மி; லக்ஷ்மி போன்றவள்
புரிசை - மதில்
பூகமுத்து - கமுகின்முத்து
பெதும்பை - 9 முதல் 11 வயசு வரை உள்ளவள்
பேதை - 7 முதல் 9 வயசுவரை உள்ள பெண்
பேரிளம் பெண் - 30 முதல் 40 வயசு வரை உள்ளவள்
மகபதி - இந்திரன்
மங்கை - 11 முதல் 13 வயசு வரை உள்ளவள்
மடந்தை - 13 முதல் 19 வயசு வரை உள்ளவள்
மந்தாரதாரு - கற்பக விருக்ஷங்களுள் ஒன்று
மருவார் - பகைவர்
மல்லாரி - ஒரு வகைப் பறை
மாகம் - ஆகாயம்
மாற்றலர் - பகைவர்
மாறன் - பாண்டியன்
மாறுஅடங்கார் - பகைவர்
மீனவன் - பாண்டியன்
முதாரி - முன்கை வளைகளுள் ஒருவகை
முன்றிலான் - முற்றத்தையுடையவன்
மேவலர் - பகைவர்
மேவார் - பகைவர்
மை - கருமேகம்
மோகாரம் மோகரம் - பேரொலி
வங்கம் - கப்பல்
வச்ராங்கி - வச்சிரச்சட்டை
வடவை - வடவாமுக அக்கினி
வந்து - காற்று
சந்தாடவி - சந்தனக்காடு
வழுதி - பாண்டியன்
வன்னி - நெருப்பு
வாகுவலயம் - தோள்வளை
வட்டா - வாய் அகலமான பாத்திரம்
வாரி - சமுத்திரம்
வாவி - தடாகம்
விதானம் - மேற்கட்டி; மேலே விரித்துக் கட்டப்பட்டது
வீராணம் - ஒருவகைப் பெரிய பறை
வீறு - மேம்பாடு